பக்கங்கள்: 12
விலை:20 ரூபா

# காலைக்கதிர்
Kalaikkathir

விடியல் 03 | வள்ளுவர் ஆண்டு 2050 | தை 02 | புதன்கிழமை 16.01.2019 | கதிர் 72

### இது ரகசியம் அல்ல!

வடக்குக் கிழக்கில் பௌத்த மத பரம்பலை தாம் தடுத்து நிறுத்துவார் என்று வடக்கு ஆளுநர் கூறினார் எனத் தெற்கில் பெரும் பிரசாரம் கட்டவிழ்த்துவிடப் பட்டிருப்பதாகச் செய்திகள் கிடைத்திருக்கின்றன.

வடக்குக்கு ஒரு தமிழர் ஆளுநர் நியமிக்கப்பட்டமையை சகிக்க முடியாத தென்பகுதி பக்கம் 02 »

# எந்தவொரு நீதிமன்றத்திலும் படைவீரர்கள் நிறுத்தப்படார்

## நீதி அமைச்சர் திட்டவட்டம்

கொழும்பு,ஜன.16

நாட்டைப் பாதுகாத்த போர் வீரர்களை எந்தவொரு நீதிமன்றத்திலும் நிறுத்துவதற்கு அனுமதிக்கப் போவதில்லை என்று நீதியமைச்சர் தலதா அத்து கோரள தெரிவித்தார்.

கஹவத்தையில் நடந்த நிகழ்வு ஒன்றில் உரையாற்றிய போதே அவர் இதனைக் கூறினார். பக்கம் 11 »



## அமெ. புரிந்துணர்வு உடன்பாட்டை நிராகரித்தது இலங்கை அரசு

கொழும்பு,ஜன.16

இலங்கையுடன் இரு தரப்பு பாதுகாப்பு ஒத்துழைப்பு உடன்பாடு ஒன்றைச்செய்துகொள்வதற்கு, அமெரிக்கா முன்வைத்திருந்த புரிந்துணர்வு உடன்பாட்டு வரைவு ஒன்றை இலங்கை அரசாங்கம் நிராகரித் பக்கம் 11 »



## வாகனங்களுக்கு காபன் வரி விதிப்பு; பஸ் உரிமையாளர்கள் போர்க்கொடி!

வாகனங்களுக்குஅவை வெளியிடும் புகைக்காகக் காபன் வரி அறவிடும் அரசாங்கத்தின் புதிய திட்டத்தை உடன் மாற்றிக் கொள்ள வேண்டும் என இலங்கை தனியார் பஸ் உரிமையாளர்கள் சங்கம் அரசாங்கத்துக்கு சிவப்பு எச்சரிக்கை விடுத்துள்ளது.

இந்த அரசாங்கம் இதுவரையில் அறிமுகம் செய்த புதிய விடயங்களில் பாரிய பிரச்சினைகள் உள்ளன. இதேபோன்ற ஓர் அம்சமாக பக்கம் 11 »

## ஜனாதிபதித் தேர்தலில் மைத்திரியே வேட்பாளர்

### மஹிந்த தரப்பு தீர்மானமாம்

கொழும்பு, ஜன. 16

ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுனவின் ஆதரவுடன் அடுத்த ஜனாதிபதித் தேர்தலில் மைத்திரிபால சிறிசேனவை வேட்பாளராக நிறுத்த எதிர்க்கட்சித் தலைவர் மஹிந்த ராஜபக்ஷ தீர்மானித்துள்ளார்.

இந்நிலையில் சுதந்திரக் கட்சி மற்றும் பொது பெரமுன கட்சிகளின் தலைவர்கள் 'கை' பக்கம் 11 »

## பொங்கல் வழிபாட்டுக்கு ஆலயம் வந்த இளைஞர்கள் மீது சரமாரி வாள்வெட்டு

### யாழ். நாச்சிமார் கோவிலில் சம்பவம்



- எஸ்.நிதர்ஷன் -

பொங்கல் தினத்தில் வாள்வெட்டுக் குழு அட்டகாசத்தில் ஈடுபட்டுள்ள சம்பவமொன்று பக்கம் 11 »

## ஹெரோயின் கடத்தல் விசாரணைக்கு பங்களாதேஷ் பொலிஸ் வருகின்றது

கொழும்பு, ஜன. 16

தெஹிவளையில் இரண்டு வெவ்வேறு சந்தர்ப்பங்களில் பாரிய தொகை போதைப்பொருள் கைப்பற்றப்பட்டமை தொடர்பில் விசாரணை நடத்துவதற்காக பங்களாதேஷின் சிரேஷ்ட பொலிஸ் குழுவினர் இன்று கொழும்பு வரவுள்ளனர்.

இது தொடர்பில் இலங்கைக்கு உத்தியோகப்பூர்வமாக அறிவிக்கப்பட்டுள்ளதெனப்பொலிஸ்போதைப்பொருள் ஒழிப்புப் பிரிவு தெரிவித்துள்ளது. பக்கம் 11 »

## வவுனியா ஈரப்பெரியகுளத்தில் மூழ்கி மாணவர்கள் இருவர் பரிதாபச் சாவு!

வவுனியா,ஜன.16

வவுனியா, ஈரப்பெரியகுளம் குளத்தில் மூழ்கி வவுனியா விபுலானந்தா கல்லூரிமாணவர்கள் இருவர் பலியாகியுள்ளனர்.

பொங்கல் நாளான நேற்று ஐந்து நண்பர்களாக இணைந்து ஈரப்பெரியகுளத்திற்கு சென்று அங்கு பக்கம் 11 »



## மாகாண சபைத் தேர்தலில் கூட்டமைப்பு மண் கவ்வும்

### விக்கியே வெற்றிபெறுவார் என்கிறது மஹிந்த தரப்பு

கொழும்பு, ஜன. 16

வடக்கு மற்றும் கிழக்கு மாகாணங்களில் இனியொரு போதும் தமிழ் தேசிய கூட்டமைப்பினர் மக்களின் ஆதரவைப் பெற முடியாது. முன்னாள் வடக்கு மாகாண முதல்வர் க.வி. விக்னேஸ்வரன் மக்களின் பக்கம் 11 »

## 5நாள் விஜயமாக ஜனாதிபதி நேற்று பிலிப்பீன்ஸ் பயணம்



இலங்கைஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவுக்கும், பிலிப்பீன்ஸ் நாட்டின் ஜனாதிபதி ரொட்ரிகோ பக்கம் 11 »

## வடக்கு அரச திணைக்களங்களில் பெண்களுக்கு 50 வீத இடஒதுக்கீடு

### புதிய ஆளுநர் சுரேன் ராகவன் திட்டம்

யாழ்ப்பாணம், ஜன. 16

வடக்கு மாகாண அரச திணைக்களங்களில் பெண் உத்தியோகத்தர்களுக்கு 50 சதவீத ஒதுக்கீடுகள் காணப்படவேண்டும். 2020/2021 ஆம்ஆண்டில்அந்தஇலக்கை அடைவதற்கான பணிகளை முன்னெடுக்ச பக்கம் 11 »



## மொட்டுடன் இணைந்தால் சு.கவுக்கு அழிவு நிச்சயம்!

### எச்சரிக்கிறார் மனு நாணயக்கார

கொழும்பு, ஜன. 16

ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுனவுடன் இணைந்து ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி கூட்டணி அமைக்குமாக இருந்தால் குறுகிய காலத்தில் சுதந்திரக் கட்சி பாரிய அழிவையே சந்திக்கும் என நாடாளு பக்கம் 11 »

# ஊடகங்களின் செயற்பாடுகள் மனதிற்கு கவலையளிக்கின்றன

## முன்னாள் முதலமைச்சர் விக்கி தெரிவிப்பு

யாழ்ப்பாணம், ஜன. 17

ஊடகங்கள் மக்களுக்கு சரியான செய்திகளை தெளிவாக வழங்குவதுடன் மக்களைப் பயமுறுத்துகின்ற அல்லது பிழையாக வழி நடத்துகின்ற அல்லது செய்திகளை மிகைப்படுத்தி வழங்குகின்ற தன்மைகளில் இருந்து விடுபட்டு உண்மையான செய்திகளை வழங்குகின்ற நிறுவனங்களாக இயங்க வேண்டும். அண்மைக்காலங்களில் ஊடகங்களின் செயற்பாடுகள் மனதிற்கு கவலையளிப்பனவாக உள்ளன.

இவ்வாறு வடக்கு மாகாண முன்னாள் முதலமைச்சர் நீதியரசர் க.வி.விக்னேஸ்வரன் தெரிவித்தார்.

அச்சுவேலி இராஜமாணிக்கம் திருமண மண்டபம் நேற்று செவ்வாய்க்கிழமை இடம்பெற்ற ஊடக நிறுவனம் ஒன்றின் ஆரம்ப நிகழ்வில் பிரதம அதிதியாகக் கலந்து கொண்டு உரையாற்றும் போதே அவர் இதனைத் தெரிவித்தார்.

நீதியரசர் க.வி.விக்னேஸ்வரன் மேலும் தெரிவித்ததாவது:

இந்தத் தைத்திருநாளில் ஊடகக் கற்கைகள் மற்றும் நிகழ்வுகளை ஒழுங்கமைக்கும் நிறுவனங்கள் திறந்து வைக்கப்படுகின்றன. இந்த நிறுவன தொடங்குநர்கள் கபிலன் மற்றும் விதுன் இருவரும் பல்கலைக்கழகத்தில் படித்துப் பட்டம் பெற்றுவிட்டு வேலையில்லாமல் திரிந்தார்கள். அப்போதுதான் இவ்வாறான சுயமுயற்சியில் ஈடுபட்டால் என்ன என்று சிந்தித்து இவற்றை ஆரம்பித்தார்கள்.

அவர்களை எனக்குத் தெரியாது. ஆனால் எம் இளைஞர்கள் சுய முயற்சிகளில் இறங்க முன்வந்துள்ளார்கள் என்று கண்டதும் அவர்களின் அன்பான அழைப்பை ஏற்றுக்கொண்டேன். வருங்காலம் எமது சுய உழைப்பிலேயே தங்கி இருக்கின்றது. அரசியலில் தன்னாட்சியும் வாழ்க்கையில் தற்சார்பும் பொருளாதாரத்தில் தன்னிறைவுமே எமது தாரக மந்திரங்களாக இனி இருக்க வேண்டும்.

தமிழ் மக்களுக்கு சிறப்பான செய்திகளை நடுநிலை தவறாது உண்மையுடனும் தெளிவாகவும் எடுத்துச் சென்று அவர்களை நெறிப்படுத்துகின்ற ஊடகமாக இவை இயங்க வழிவகுப்பன என்று எதிர்பார்க்கின்றோம். ஊடகங்கள் மக்களுக்கு சரியான செய்திகளை தெளிவாக வழங்குவதுடன் மக்களைப் பயமுறுத்துகின்ற அல்லது பிழையாக வழி நடத்துகின்ற அல்லது செய்திகளை மிகைப்படுத்தி வழங்குகின்ற தன்மைகளில் இருந்து விடு பட்டு உண்மையான செய்திகளை வழங்குகின்ற நிறுவனங்களாக இயங்க வேண்டும்.

அண்மைக்காலங்களில் ஊடகங்களின் செயற்பாடுகள் மனதிற்கு கவலையளிப்பனவாக உள்ளன. செய்திகளை போட்டி போட்டுக்கொண்டு முதலில் வெளியிட வேண்டும் என்ற அவாவில் முறையாக ஆராயாமல் செய்திகளை வெளியிட்டு மக்களைக் குழப்பிய நிலையில் பின்னர் திருத்தங்களைப் பிரசுரிப்பதும் அல்லது பிரசுரிக்காமல் அப்படியே விட்டு விடுகின்ற பல நிகழ்வுகளையும் நாம் அவதானித்திருக்கின்றோம்.

இன்றைய ஊடகங்களின் முக்கிய பணியாக எடுத்ததற்கெல்லாம் யாரையாவது குறை கூறுவதும் எங்கள் பிழையை மறைக்க ஏனையவர்கள் மீது பழிகளை சுமத்துகின்ற தன்மையைக் கொண்டும் காணப்படுகின்றன. தமிழ் மக்களின் எதிர்பார்ப்புகளுக்கும் எமது சுய கௌரவத்திற்கும் எதிராக இயங்கும் பெரும்பான்மை இனத்தவர்களாக இருந்தால் கூட அவர்கள் புரிகின்ற நல்ல செயல்களை அல்லது நன்மையான விடயங்களை நாம் பாராட்ட ஒரு போதும் பின் நிற்கக் கூடாது.

சரியான விடயங்களைச் சரி என்று கூறும் தன்மையும் தவறான விடயங்களைச் சுட்டிக் காட்டத் தயங்காத தன்மையும் ஊடகங்களுக்கு அவசியமாகும்.

ஊடகங்கள் வெறுமனே செய்திகளையும் நாட்டுநடப்புக்களையும் மட்டும் வழங்குகின்ற தகவல் நிலையங்களாக அமையாமல் அதற்கு ஒரு படி மேலாகச் சென்று எமது வருங்கால சந்ததியை, இளையோரை நல்வழிப்படுத்துகின்ற சாதனங்களாக அமைய வேண்டும்.

உதாரணத்திற்கு அவர்களின் கல்வி நடவடிக்கைகளுக்கு உதவுகின்ற வகையில் நடந்து கொள்ள வேண்டும். இன்றைய நிறுவனங்கள் இரண்டும் இளைஞர்களால் வழி நடத்தப்படுவதால் இதனை அவர்கள் புரிந்திருப்பார்கள் என்று நம்புகின்றேன்.

எமது பகுதிகளில் இடம்பெற்ற நீண்டகாலப் போரின் விளைவாக எமது இளையோர்கள் அவர்களின் கல்வி நடவடிக்கைகளில் சிறிய தளர்வை சந்தித்திருப்பது தவிர்க்க முடியாதது. ஆனாலும் போர் ஓய்வுக்கு வந்த பின்னரும் கூட எமது இளைய சமுதாயம் தமது கல்வி மட்டத்தை பழைய நிலைக்கு உயர்த்தாது இருப்பது நீண்ட கால தாக்கங்களை ஏற்படுத்தக் கூடியன.

நன்கு திட்டமிட்ட வகையில் தமிழ் இளைஞர் இளைஞிகளின் கற்றல் நடவடிக்கைகளைக் குழப்பக்கூடிய வகையில் பல கைங்கரியங்கள் முன்னெடுக்கப்பட்டு வருவது நாம் அனைவரும் அறிந்ததே. அவற்றுள் ஒன்று தான் மாணவர்களிடையே போதைப் பழக்கத்தைத் தூண்டி வருவது. நாம் தெளிவாக இருப்போமேயாகில் எத்தனை தடைகள் வந்தாலும் அவற்றை முறியடித்து கல்வியின்பால் முன்னேற முடியும். ஆனால் தமது அற்ப சொற்ப நன்மைகளுக்கும் சுகபோகங்களுக்குமாகப் பல இளைஞர்கள் தமது எதிர்காலங்களை வீணடித்து ஈற்றில் உயிரையும் மாய்க்கின்ற செயற்பாடுகள் பற்றி தினந் தினம் செய்திகள் வந்தவண்ணமே உள்ளன.

ஒழுங்கற்ற வீதிப் போக்குவரத்து, போதைப் பழக்கம், மிதமிஞ்சிய ஆடம்பர வாழ்க்கை ஆகியன பல இன்னுயிர்களை காவுகொள்கின்றன. எமது கண்முன்னே இந் நிகழ்வுகள் அரங்கேறிய வண்ணம் உள்ளன. இவற்றை சீர் செய்ய வேண்டியது எங்கள் அனைவரினதும் கட்டாயப் பணியாகும். பிள்ளைகள் பற்றிய கட்டுப்பாடு பெற்றோர்களிடத்தில் இல்லை. பாடசாலைகளில் மாணவ மாணவியரைக் கட்டுப்படுத்த ஆசிரியர்கள் பயப்படுகின்றார்கள். கட்டுப்படுத்தல் என்பது அன்பு வழியில் அமைய வேண்டும். அடித்தால் அவர்கள் மேலும் மேலும் அதையே செய்வார்கள். அது இளமையின் குணம். வன்மையுடன் சேர்ந்த கட்டுப்பாடுகளை அவர்கள் புறக்கணிக்கின்றார்கள்.

மோட்டார் சைக்கிளில் தலைக்கவசம் அணியாது வேகமாகச் செலுத்துவது விண்வெளியில் பிரயாணம் செய்வது போன்ற ஒரு பிரமையை இளைஞர்களிடையே உருவாக்குகின்றது. ஆனால் எத்தனை பேர் விண்வெளியில் நின்று நேராக வேறெங்கோ சென்றுள்ளார்கள் என்பதை அவர்களுக்கு விளக்க வேண்டும். அதற்கு ஊடகங்கள் தமது பெரிய பங்களிப்புக்களை நல்க முன்வர வேண்டும்.

இன்று ஆங்காங்கே திருமண மண்டபங்கள் உருவாக்கப்பட்ட நிலையில், திருமணச் சாப்பாடுகள் வழங்கும் நிறுவனங்கள் வந்த பின், சமயச் சடங்குகளை நடத்தும் அந்தணர் கூட்டங்கள் வந்த பின், திருமண வீட்டு உரிமையாளர்கள் கூட அன்றைய தினம் தாமும் திருமண வீட்டிற்குச் செல்கின்ற ஒரு விருந்தினர் போல புறப்பட்டு மண்டபத்திற்கு செல்வார்கள். மண்டபத்தில் உணவு பரிமாறப்படும்.

சமயச் சடங்குகள் என்ற பெயரில் ஏதேதோ கைங்கரியங்கள் நிறைவு பெறும். வாழ்த்த வந்தவர்களும் ஏனோ தானோ என்று வாழ்த்தரிசியை அள்ளித் தலையில் இறைத்துவிட்டு உணவுப் பந்திக்கு ஓடிச் சென்று விடுவார்கள். முன்னைய நாள்களில் எமது சிறப்பு நிகழ்வுகளில் கலந்து கொள்ள வந்த பெரியவர்களை முறையாக நீர்ச் செம்பு கொடுத்து வரவேற்காவிட்டால் அவர்கள் உணவு அருந்தமாட்டார்கள். இது போன்ற நல்ல பழக்கவழக்கங்கள் மற்றும் சம்பிரதாயங்கள் எம்மை விட்டு மெல்ல மெல்ல விலகி ஓடிக் கொண்டிருக்கின்றன.

ஒரு சாரார் இதனை தமக்கு சாதகமாக்கிக் கொண்டு பணம் படைப்பவர்களாக மாறி வருகின்றனர். தமிழ் மக்களின் பாரம்பரிய கலை உணர்வுகளும் பழக்கவழக்கங்களும் இவற்றால் சிதறடிக்கப்படுகின்றனவோ என்று எண்ண வேண்டியுள்ளது. ஒருபுறம் எமது பழக்க வழக்கங்கள் ஒவ்வொன்றிற்கும் விஞ்ஞான ரீதியாக அர்த்தம் கற்பிக்கின்றார்கள். மறுபுறம் அவற்றை உதாசீனம் செய்கின்றார்கள்.

எமது பழக்க வழக்கங்களின் உண்மையை அறிந்து அவற்றைப் பின்பற்றுவதால் எமக்கு நன்மையே கிடைக்கும் அன்றி தீமை எதுவும் ஏற்படாது. ஆனால் மாறி வரும் வேக வாழ்க்கையையும் நாங்கள் கருத்திற்கெடுக்க வேண்டும். எப்பொழுதும் எமது நடவடிக்கைகளில் ஒரு சமன் படுத்தல் இருக்க வேண்டும் என்று கூற வருகின்றேன்.

சடங்குகளில் இறங்கும்போது அவற்றின் உட்பொருள் அறிந்து அவற்றில் இறங்குவது நல்லது– என்றார். (ஐ)

## இனி...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

பேரினவாதத் தரப்புகள் இந்தப் பிரசாரத்தை முன்னெடுத்தாவது தமிழரை அந்தப் பதவியிலிருந்து துரத்தலாம் எனத் துடிதுடியாத் துடிக்கின்றன.

இந்த இனவாதப் பிரசாரம் தெற்கில் கொடி கட்டிப்பறக்கின்றமையை அடுத்து, வடக்கு ஆளுநரிடம் ஆங்கிலப் பத்திரிகைக்குச் செவ்வி பெற்ற பெண் பத்திரிகையாளர் தமது 'டுவிட்டர்' பக்கத்தில் நிலைமையைத் தெளிவுபடுத்தியிருக்கின்றார்.

*"வடக்கு ஆளுநரின் பேட்டி (சில தரப்புகளின்) தேவைக்கு ஏற்ப திரிக்கப்பட்டிருக்கின்றது. வடக்கு, கிழக்கில் பௌத்த மயமாக்கலைத் தாம் தடுத்து நிறுத்தப் போகின்றார் என அவர் எந்தச் சந்தர்ப்பத்திலும் கூறவில்லை. அரசியல் நோக்கத்திற்காக பௌத்த மயமாக்கல் முன்னெடுக்கப் படக்கூடாது என்பதே அவரது கருத்து. இலங்கை ஊடகங்கள் ஏன் இப்படித் திரிவுபடுத்துகின்றன?"* – என்று ஆளுநரைச் செவ்வி கண்டு ஆங்கில வாரப் பத்திரிகைக்கு அதனை எழுதிய சுலோசனா இராமையா தனது டுவிட்டர் பக்கத்தில் குறிப்பிட்டுள்ளார்.

தமிழ்த் தேசிய சிந்தனைமிக்கவரான சுரேன் ராகவனை அப்பதவியில் நீடிக்கவே விடக்கூடாது என்று கங்கணம் கட்டி ஒரு குழு தீவிரமாகக் களமிறங்கியுள்ளது.

புதிய ஆளுநர் வெளிப்படுத்தும் சொல்லாடல்களை வைத்தே அவரைத் தாக்குவதற்கு ஒரு குழு காத்திருக்கின்றதாம்.

எதற்கும் புதிய ஆளுநர் சுரேன் ராகவன் கொஞ்சம் எச்சரிக்கையாக இருப்பது நல்லது.

அவரது பதவிக் கதிரைக்கு ஆப்பு வைக்கும் முயற்சியில் பெரிய பெரிய கைகள் எல்லாம் கூடக் களத்தில் குதித்திருக்கின்றன என்றும் தகவல்.

ஆகவே ஆளுநர் தமது கருத்துக்களைக் கொட்டுவதற்கு முன்னர் இடம், பொருள், ஏவல் பார்த்துச் செயற்படுவது நல்லது.

- மின்னல் -

# சம்பந்தர், சுமந்திரன் துள்ளிக் குதிக்கின்றமையால் புதிய அரசமைப்பில் ஏதோ பொதிந்து கிடக்கின்றது

## சந்தேகப்படுகின்றார் மஹிந்த ராஜபக்ஷ

கொழும்பு,ஜன.16

பிரதமர் ரணில் விக்கிரமசிங்க கூறுவதுபோன்று புதிய அரசமைப்பில் பெரிய விவகாரங்கள் எதுவும் இல்லை என்றால், சம்பந்தரும் சுமந்திரனும் ஏன் துள்ளிக் குதிக்க வேண்டும் என்று எதிர்கட்சித் தலைவர் மகிந்த ராஜபக்ஷ கேள்வி எழுப்பியுள்ளார். தற்போது புதிய அரசமைப்பொன்று தேவையில்லை என்றும் அதில் காணப்படும் அதிகாரங்கள், நாட்டைப் பிளவுபடுத்தும் என்றும் அவர் கூறியுள்ளார். சர்வதேச ஊடகம் ஒன்றுக்கு வழங்கிய செவ்வியில் அவர் இதனைக் குறிப்பிட்டுள்ளார்.

"வடக்கு கிழக்கு இணைப்பில்லை, ஒற்றையாட்சியே, பௌத்திற்கு முன்னுரிமை என பிரதமர் ரணில் கூறுகின்றபோதும், தமிழ்தேசியக் கூட்டமைப்பு அதனை ஆதரிப்பதனால், அதில் ஏதோ இருக்கிறது. கூட்டமைப்பினர் முட்டாள்கள் அல்லர்." – என்றும் அவர் தெரிவித்தார்.

"பிரதமர் சொல்வதன் அடிப்படையில் குறித்த சொற்பதங்கள் இல்லாதிருக்கலாம். ஆனால் நாட்டைப் பிளவுபடுத்தும் அதிகாரங்கள் இருப்பதனாலேயே கூட்டமைப்பு, அதனை ஆதரிக்கின்றது.

"ரணில் விக்கிரமசிங்கவின் தந்திரம் எனக்குத் தெரியும். அவர் வடக்கு, கிழக்கைத் தாரைவார்த்து விடுவார். ரணில் விக்கிரமசிங்க, சம்பந்தன், சுமந்திரன் ஆகியோர் புலம்பெயர் தமிழர்களின் நிகழ்ச்சி நிரலில் செயற்படுகின்றனர். அவர்களுக்குப் பின்னால் பலம் பொருந்திய நாடுகள் உள்ளன.

"நாட்டில் நாடாளுமன்றத் தேர்தலை நடாத்தி, அரசாங்கத்தை அமைக்க வேணடும்.

"புதிய அரசமைப்பை நிறைவேற்ற நாம் ஒரு போதும் இடமளிக்க மாட்டோம்." – என்றும் மஹிந்த ராஜபக்ஷ மேலும் தெரிவித்தார்.

# புதுக்குடியிருப்பில் சிறப்புற நடைபெற்ற இயற்கை விவசாய வார இறுதி நிகழ்வு

முல்லைத்தீவு,ஜன.16

இயற்கை விவசாயத்தினை மேம்படுத்தும் நோக்கில் வடக்கில் சகல மாவட்டங்கிலும் இயற்கைவழி ஆர்வலர்களின் பங்கெடுப்புடன் கடந்த 08.01.19 அன்று மன்னாரில் தொடக்கிவைக்கப்பட்ட இயற்கை விவசாய வார இறுதி நிகழ்வு நேற்றுமுன்தினம் புதுக்குடியிருப்பில் அமைந்துள்ள செல்வபாக்கியம் பண்ணையில் நடைபெற்றுள்ளது.

மருத்துவர் பிரபு தலைமையில் நடைபெற்ற நிகழ்வில் செல்வபாக்கியம் பண்ணையின் உரிமையாளரும் நடனம்மா இயற்கை வழி உள்ளீடுகள் உற்பத்தியின் உரிமையாளருமான நேசன் தனது இயற்கை வேளாண் மாடு வளர்ப்பு தொடர்பில் உரை நிகழ்த்தினார்.

இதில் விவசாய போதனாசிரியர்கள்,பிரதேச செயலக அதிகாரிகள் மற்றும் இயற்கை இயக்கத்தினைச் சேர்ந்த உறுப்பினர்கள் விவசாயிகள் எனப் பலர் கலந்து கொண்டு பலன் பெற்றுள்ளார்கள்.

இனிவரும் காலங்களில் இயற்கை வழி உள்ளீடுகளை பயன்படுத்தி எவ்வாறு உற்பத்திகளை மேற்கொள்ளவேண்டும் என்பது தொடர்பிலும், அதனால் உடல் நலனுக்கு கிடைக்கும் நன்மைகள் தொடர்பிலும் முல்லைத்தீவு மாவட்ட பிரதி மாகாண விவசாயப் பணிப்பாளர் எஸ்.உகநாதன் எடுத்துரைத்தார்..




# மாகாணசபையை எதிர்த்த ஜே.வி.பி. அதிகாரங்களை அதிகரிக்க கோருகிறது

## கூறுகிறார் வாசுதேவ



கொழும்பு,ஜன.16

மாகாணசபை முறைமையை எதிர்த்த மக்கள் விடுதலை முன்னணி தற்போது அதன் அதிகாரங்களை அதிகப்படுத்த நடவடிக்கை எடுத்து வருகின்றது. அத்துடன் இலங்கை – இந்திய ஒப்பந்தம் இடம்பெறும்போது நாட்டில் அவர்கள் ஏற்படுத்திய அழிவுக்கு மக்களிடம் மன்னிப்புக் கோரவேண்டும் என ஜனநாயக இடதுசாரி முன்னணியின் தலைவரும் நாடாளுமன்ற உறுப்பினருமான வாசுதேவ நாணயக்கார தெரிவித்தார்.

சோசலிச மக்கள் முன்னணி நேற்று முன்தினம் கொழும்பில் நடத்திய செய்தியாளர் சந்திப்பில் கலந்துகொண்டு கருத்து தெரிவிக்கையிலேயே இவ்வாறு தெரிவித்தார்.

அவர் அங்கு தொடர்ந்து கூறுகையில் –

மாகாணசபை முறைமை அறிமுகப்படுத்தி, மாகாணங்களுக்கு அதிகாரங்களை வழங்க அரசமைப்பின் 13 ஆம் திருத்தம் மேற்கொள்ளப்பட்டது. இலங்கை – இந்திய ஒப்பந்தத்தின் பிரகாரமே இந்நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டது. அன்று மாகாணசபைகளை ஏற்படுத்தி அதற்கு அதிகாரங்களை வழங்க நடவடிக்கை எடுக்கும்போது மக்கள் விடுதலை முன்னணி நாட்டில் பெரும் குழப்பங்களை ஏற்படுத்தி வந்தது.

ஆனால் இன்று மாகாணசபைகளின் அதிகாரங்களை அதிகரிக்கவேண்டும் என பிரசாரம் செய்து வருகின்றது. இலங்கை – இந்திய ஒப்பந்தத்தை எதிர்த்து நாட்டில் பெரும் பிரச்சினையை ஏற்படுத்திய இவர்கள், தற்போது அவர்களின் நிலைப்பாடு என்ன என்பதை வெளிப்படுத்தவேண்டும். அத்துடன் அன்று நாட்டில் ஏற்படுத்திய குழப்பத்துக்காக நாட்டு மக்களிடம் மன்னிப்பு கோரவேண்டும்.

மேலும் மக்கள் விடுதலை முன்னணியை இந்த அரசாங்கத்தின் பங்காளியாகவே பார்க்கின்றோம். பகிரங்கமாக அரசாங்கத்துக்கு எதிரான நடவடிக்கைகளை மேற்கொள்கின்றபோதும் மறைமுகமாக ஆதரித்து வருகின்றது. அவர்களின் நிலைப்பாடு அனைவருக்கும் தெரியும். புதிய அரசமைப்பு விடயத்திலும் அவர்கள் உறுதியான நிலைப்பாட்டில் இல்லை.

அதனால் இலங்கை – இந்திய ஒப்பந்தத்தை எதிர்ப்பதன் மூலம் மாகாணசபை முறைமையை எதிர்த்து வந்த மக்கள் விடுதலை முன்னணி தற்போது மாகாணங்களுக்கான அதிகாரங்களை அதிகரிக்கவேண்டும் என தெரிவிக்கின்றது. அவர்களின் இந்த நிலைப்பாடு கடந்தகால நிலைப்பாட்டில் இருந்து மாறியுள்ளதா என்பதை தெரிவிக்கவேண்டும் என்றார்.

# தேசிய பாடசாலை அதிபர் நியமனம் அரசசேவை ஆணைக்குழுவிடம்

## பெயர்ப்பட்டியல் சமர்ப்பிப்பு

கொழும்பு,ஜன.16

தேசிய பாடசாலைகளுக்கான புதிய அதிபர்கள் நியமனம் தொடர்பான பெயர்ப்பட்டியல் அடுத்த வாரம் அரச சேவைகள் ஆணைக்குழுவின் அனுமதிக்காக சமர்ப்பிக்கப்படும் என கல்வி அமைச்சு வட்டாரங்கள் தெரிவித்துள்ளன.

தேசிய பாடசாலைகள் 303 இற்காக அமைச்சினால் கோரப்பட்ட விண்ணப்பங்களுக்கமைய 800 இற்கும் அதிகமானோர் விண்ணப்பித்திருந்தனர் எனவும் கூறப்படுகின்றது.

# சர்வதேச மரபுரிமையாக மாறுகிறது திரிபீடகம்

கொழும்பு,ஜன.16

தேசிய மரபுரிமையாக பிரகடனப் படுத்தப்பட்டுள்ள பௌத்த மக்களின் மரபுரிமையான திரிபீடகத்தை உலக மரபுரிமையாக ஆக்கும் பிரேரணைக்கு அமைச்சரவை அங்கீகாரம் வழங்கியுள்ளது.

ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன வினால் முன்வைக்கப்பட்ட முன்மொழிவுக்கே இந்த அங்கீகாரம் வழங்கப்பட்டுள்ளது.

திரிபீடகத்தை தேசிய மரபுரிமையாக்கும் தேசிய நிகழ்வு கடந்த 2019 ஜனவரி மாதம் 05 ஆம் திகதி வரலாற்று முக்கியத்துவம் வாய்ந்த மாத்தளை அலுவிகாரையில் இடம்பெற்றது.

இந்தப் பிரேரணை விரைவில் நாடாளுமன்றத்திலும் அனுமதிக்காக சமர்ப்பிக்கப்படவுள்ளதாகவும் தெரிவிக்கப்படுகின்றது.

# ஹஜ் கோட்டா 3500 ஆக அதிகரிப்பு

கொழும்பு,ஜன.16

தபால் மற்றும் முஸ்லிம் சமய விவகார அமைச்சர் எம். எச். ஏ.ஹலீம், சவுதி அரசாங்கத்தின் ஹஜ் விவகாரங்களுக்கு பொறுப்பான அமைச்சர் உள்ளிட்ட குழுவுடன் நடத்திய பேச்சு வார்த்தையின் பயனாக இம்முறை இலங்கைக்கு வழங்கப்படும் ஹஜ் கோட்டாவை 3500 ஆக அதிகரிக்க சவுதி அரசு தீர்மானித்துள்ளதாக தபால் மற்றும் முஸ்லிம் சமய விவகார அமைச்சர் எம்.எச்.ஏ. ஹலீம் தெரிவித்தார்,

கடந்த வருடங்களில் இலங்கைக்கு கிடைக்கப்பெற்ற ஹஜ் கோட்டாவின் தொகை 3000 இற்கு அண்மித்த தொகையாக காணப்பட்டமை குறிப்பிடத்தக்கது.

# நாடாளுமன்ற மோதல் சம்பவம்: சட்டமா அதிபருக்கு அறிக்கை

கொழும்பு,ஜன.16

நாடாளுமன்றத்தில் ஏற்பட்ட குழப்பநிலை மற்றும் மோதல் தொடர்பான அறிக்கையைச் சட்டமா அதிபருக்கு அனுப்பத் தீர்மானிக்கப்பட்டுள்ளதாக பிரதி சபாநாயகர் ஆனந்த குமாரசிறி தெரிவித்துள்ளார்.

கொழும்பில் நேற்றுமுன்தினம் திங்கட்கிழமை ஊடகங்களுக்கு கருத்துத் தெரிவித்தபோதே அவர் இதனைக் குறிப்பிட்டுள்ளார். இது தொடர்பாக அவர் மேலும் தெரிவிக்கையில்,


இறுதியாக கூடிய குழுக் கூட்டத்தில் நாம் அறிக்கை தயாரித்து வைத்துள்ளோம். சபாநாயகர் கரு ஜெயசூரிய நாடு திரும்பியவுடன் துரிதநடவடிக்கைகள் இடம்பெறும்.

நாடாளுமன்றத்தில் ஏற்பட்ட குழப்பங்களின்போது அரச ஊழியர்களை தாக்கிய மற்றும் அரச சொத்துக்களை நாடாளுமன்ற உறுப்பினர்கள் சிலர் சேதமாக்கியிருந்தனர்.

இதற்கு எதிராக நடவடிக்கை எடுக்க எனது தலைமையில் எழுவர் கொண்ட நாடாளுமன்ற விசாரணைக் குழுவொன்று சபாநாயகர் கரு ஜெயசூரியவினால் நியமிக்கப்பட்டிருந்தது.

இந்த குழுவினர் கடந்த வாரம் நாடாளுமன்ற அமர்வுகளின் போது இறுதியாக கூடி சில தீர்மானங்களை எடுத்திருந்தனர்.

குறிப்பாக நாடாளுமன்றில் ஏற்பட்ட குழப்பநிலை மற்றும் மோதல்கள் குறித்து நாடாளுமன்ற காணொலிகள், வாக்கு



மூலங்கள் மற்றும் சொத்து சேத விவரங்களை மதிப்பீடு செய்து அறிக்கை ஒன்று தயாரிக்கப்பட்டுள்ளது என பிரதி சபாநாயகர் ஆனந்த குமாரசிறி மேலும் குறிப்பிட்டார்.

# சுதந்திரக்கட்சி அதிருப்தியாளர்கள் விரைவில் ஐ.தே.க வுடன் இணைவர்

## நவீன் திஸநாயக்க நம்பிக்கை

கொழும்பு,ஜன.16

பொதுஜன பெரமுனவுடன் இணைந்து ஸ்ரீலங்கா சுதந்திரக்கட்சி அமைக்கவுள்ள கூட்டணியில் அங்கத்துவம் வகிக்க விரும்பாத சுதந்திரக் கட்சி உறுப்பினர்கள் ஐக்கிய தேசியக் கட்சியுடன் இணைந்து தமது அரசியல் நடவடிக்கைகளை முன்னெடுப்பார்கள் என பெருந்தோட்டக் கைத்தொழில் அமைச்சர் நவீன் திஸாநாயக்க தெரிவித்தார்.

அத்தோடு மஹிந்த ராஜபக்ஷ தலைமையிலான குழு தற்போது அரசமைப்பைக் காட்டி புதிதாக ஒரு பிரச்சினையை ஆரம்பித்துள்ளது.

அது தொடர்பாக மாத்திரமே கருத்துக்களையும் வெளியிட்டுக் கொண்டிருக்கின்றனர். நாட்டில் காணப்படும் ஒருமைப்பாட்டினையும் அரசுரிமையினையும் பாதிக்கும் வகையில் நாம் ஒரு போதும் செயற்படப் போவதில்லை எனவும் அவர் மேலும் தெரிவித்தார்.

# கணவர் சடலமாக மீட்பு மனைவி கைது!

மட்டக்களப்பு, ஜன. 16

மட்டக்களப்பு – வந்தாறுமூலையில் வீடொன்றிலிருந்து கணவரின் சடலம் கண்டெடுக்கப்பட்ட சம்பவம் தொடர்பில், அவரின் மனைவி கைது செய்யப்பட்டுள்ளார் என ஏறாவூர் பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

வந்தாறுமூலை, மூங்கிலடி வீதியை அண்மித்துள்ள வீட்டிலிருந்து 3 பிள்ளைகளின் தந்தையான செல்வராசா கலைச்செல்வன் (வயது 35) என்பவரின் சடலமே கண்டெடுக்கப்பட்டுள்ளது.

## நமது பார்வை

உண்மை – நேர்மை – பக்கம் சாராமை

ஆசிரியபீடம்: 30, கல்லூரி வீதி, யாழ்ப்பாணம்
செய்தி: 021 222 3000, kalaikkathirnews@gmail.com
தொலைநகல் (fax) : 021 221 9440, ads@kalaikkathir.lk
விளம்பரம்/விநியோகம்: 021 222 2600

## மாற்று வழியையும் தேடுவோம்!

இன்னுமொரு பொங்கல் கடந்து போய்விட்டது.

2016 தொடக்கம் ஜனாதிபதியும் பிரதமரும் நடத்தும் தேசியப் பொங்கயல் நிகழ்வு, தேசியத் தீபாவளி நிகழ்வுகளில் தவறாது பங்குபற்றும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைவர் சம்பந்தன், அடுத்த பொங்கலுக்கு முதல் அல்லது அடுத்த தீபாவளிக்கு முன்னர் தேசிய இனப்பிரச்சினைக் கான தீர்வையும் உள்ளடக்கிய புதிய அரசமைப்பு வந்துவிட வேண்டும் என்று வலியுறுத்தி, நம்பிக்கையூட்டி அங்கு உரை நிகழ்த்தத் தவறுவதில்லை.

அதை வைத்துக் கொண்டு நமது ஊடகங்களும் 2016 இல் தீர்வு, 2017 இல் தீர்வு, 2018 இல் தீர்வு என்றெல்லாம் சம்பந்தன் கூறினார் எனச் செய்திகளை வெளியிடுவது வழமை.

இந்தத் தடவையும் பிரதமர் அலுவலகப் பொங்கல் விழா வில் சம்பந்தன் ஐயா கலந்துகொண்டார். உரையாற்றினார். ஆனால் வழமை போல, இதோ தீர்வுக்கு வாய்ப்பிருக்கின்றது என்ற தொனிப்பட இம்முறை அவர் பேசவேயில்லை. மாறாக, இந்த விவகாரம் கால வரையறையின்றி இழுத்தடிக்கப்படு கின்றமை தொடர்பில் தமது ஆதங்கத்தை வெளிப்படுத்தும் ஓர் உரையையே அங்கு அவர் நிகழ்த்தினார்.

ஓர் இணக்கமான – நின்று, நிலைத்து, நீடிக்கக் கூடிய – நீதி, நியாயமான – ஒரு தீர்வை எட்டுவதற்காக முழு நேர் மைத் திறத்துடனும், ஆகக்கூடிய விட்டுக் கொடுப்புடனும், முழு ஈடுபாட்டுடனும் இந்த முயற்சியில் இயங்கியவர் சம்பந்தன்.

பெரும்பான்மைச் சிங்கள மக்களோடு இணங்கி ஒரு நியாயத் தீர்வைக் காண்பதற்காக, இதுவரை காலமும் அதிகாரத்தில் இருந்த ராஜபக்ஷக்களின் அரசை வீழ்த்தி, மைத்திரிபால சிறிசேனவை ஜனாதிபதியாக்கவும், நல்லாட்சி அரசை ஏற்படுத்தவும் தமிழரின் தலைவராக எழுந்து நின்று பாடுபட்டார் சம்பந்தன்.

ஆனால், தென்னிலங்கையில் அதிகாரத்துக்குப் போட்டி யிடும் தரப்புகள் தமிழர்களைத் தங்களது அதிகாரப் பந்த யத்தில் கறிவேப்பிலையாகப் பயன்படுத்தி விட்டு வெறுமனே தூக்கிக் கடாசும் அற்பனத்தனத்தையே கொண்டிருக்கின் றன என்பதை இப்போது கண்டுணர்ந்து பெரும் விசனத்துள் மூழ்கியிருக்கின்றார் அவர்.

பிரதமர் அலுவலகத்தின் தேசியத்தைப் பொங்கல் விழா வில் அவர் ஆற்றிய ஆதங்க உரை அதனையே வெளிப்படுத்தி நிற்கின்றது. அமைதி முயற்சிக்கு – சமாதான எத்தனங் களுக்கு – மாறான, எதிரான பேரினவாத சக்திகள் தெற்கில் மீளவும் எழுச்சி கொண்டுவரும் நிலையில் –

அதனால், தேசிய இனப்பிரச்சினைக்கான தீர்வையும் உள்ளடக்கிய புதிய அரசமைப்பு உருவாக்க முயற்சிகள் பெரும் பின்னடைவைக் கண்டு வருகையில் –

தெற்கில் சடுதியாக ஏற்படக் கூடிய அரசியல் மாற்றங்கள், அத்தகைய அரசமைப்பு உருவாக்க முயற்சிகளுக்கு உந்து சக்தியானவையாக மாறிவிடும் வாய்ப்புள்ளது என்றும் –

அதனால் புதிய அரசமைப்பு உருவாக்க முயற்சிகளில் அவநம்பிக்கை கொண்டு அவற்றை அடியோடு கைவிடாமல், அவற்றின் மீது நம்பிக்கை வைத்துத் தொடர்ந்தும் பணி யாற்றுவது அவசியம் என்றும் – கூட்டமைப்பின் பேச்சாளர் சுமந்திரன் கூறுகின்றார்.

ஆனால் யதார்த்த நிலைமையோ விபரீதத்தை நோக்கியே செல்கின்றது என்பது அப்பட்டமாக விளங்குகின்றது.

இதுவரை *'ஏக்கிய இராஜ்ஜிய / ஒருமித்த நாடு'* என்ற பதம் ஊடாக தீர்வுக்கு வழி காண முயன்ற பிரதமரே இப் போது அதை விடுத்து, தற்போதைய அரசமைப்பில் நாட்டின் ஆட்சிமுறை அமைப்பு *'ஒற்றையாட்சி'* என்று வலியுறுத்தும் 2 ஆவது ஷரத்தைப் பேணிப் பாதுகாப்பதில் தாம் உறுதி யாக இருக்கின்றார் என்று தெரிவித்துள்ளார்.

மறுபக்கத்தில் இந்த அரசமைப்பு உருவாக்க முயற்சிகளின் போது புதிய அரசமைப்புக்கு ஆதரவாக வாக்களிக்கும் என எதிர்பார்க்கப்பட்ட ஜே.வி.பி. இப்போது தனது சுயரூபத் தைக் காட்டத் தலைப்பட்டுள்ளது.

வடக்குக்கு பொலிஸ், சட்ட அதிகாரம் வழங்குவதற்கு ஒரு போதும் இடமளியோம் என்று ஜே.வி.பியின் ஊடகப் பேச்சாளர் விஜித ஹேரத் அறிவித்திருக்கின்றார்.

இதுதான் ஜே.வி.பியின் உத்தியோகபூர்வ நிலைப்பாடு என்றால், சட்டம், ஒழுங்கு அதிகாரங்களை மாகாணங் களுக்குப் பகிரும் எந்தத் தீர்வுக்கும் ஜே.வி.பி. இணங்கப் போவதில்லை. இவ்விடயங்களில் பொதுஜன பெரமுன உட்பட்ட கூட்டு எதிரணிப் பக்கம் ஜே.வி.பி. போய் நின்றுவிடும் என்பதும் எதிர்பார்க்கத்தக்கதே.

அதுதான் நிலைமை என்றால், புதிய அரசமைப்பு உரு வாக்கத்துக்கான வாய்ப்புகள் மென்மேலும் அருகி வரு கின்றன என்பதே பொருள். ஜே.வி.பியின் ஆதரவைக் கூட இந்த முயற்சிக்குத் திரட்ட முடியாத நிலையில், சாத்திய மான – தமிழர் தரப்பும் சேர்ந்து ஏற்றுக் கொள்ளக்கூடிய – ஒரு தீர்வை எட்டுவது என்பது எட்டாப்பழமே.

தீர்வுக்கான முயற்சிகளைக் குழப்பிய குற்றச்சாட்டு தமிழர் தரப்பு மீது வந்துவிடக் கூடாது என்பதற்காக அதில் இன்னும் நம்பிக்கை வைத்திருப்பவர்களாக எங்களை நாம் காட்டிக் கொண்டிருக்க வேண்டிய தேவை இருந்தா லும் கூட–

அந்த முயற்சி சாத்தியமற்றுக் கைநழுவிப் போகின்றமை உறுதியாகி வரும் இச்சூழலில் மாற்று ஏற்பாடுகள் – வழி முறைகள் – தந்திரோபாயங்கள் – உத்திகள் – குறித்தும் தமிழர்கள் சிந்திக்க வேண்டியிருக்கின்றார்கள் என்பது முக்கியமானதாகும்.

# வடக்கில் மொழிப்பிரச்சினைகளை ஆராய குழுவொன்றை நியமித்தார் ஆளுநர்

யாழ்ப்பாணம்,ஜன.16

வடக்கு மாகாணத்தின் அரச நிறுவனங்களில் காணப்படும் மொழிப் பிரச்சினைகள் தொடர் பில் ஆராய்ந்து தேவையான நடவடிக்கைகளை மேற்கொள் ளும் வகையில் யாழ்ப்பாண பல்கலைக் கழகத்தின் சிரேஷ்ட விரிவுரையாளரொருவரின் தலை மையில் ஐவரடங்கிய விசேட குழுவொன்று ஆளுநர் கலாநிதி சுரேன்ராகவன் ஆலோசனையின் பேரில் நியமிக்கப்பட்டுள்ளது.

எதிர்வரும் ஏப்ரல் மாதம் ஒன் பதாம் திகதிக்கு முன்னர் வடக்கு மாகாணத்தின் சகல அரசாங்க திணைக்களங்கள் மற்றும் அலு வலகங்களில் மும்மொழிக் கொள்கையினை சரியான முறை யில் அமுல்படுத்த வேண்டு மென்று வடக்கு மாகாண ஆளுந ரினால் விடுக்கப்பட்ட பணிப்பு ரைக்கு அமைவாக அந்த நடவ டிக்கைகள் குறிப்பிட்ட அரச திணைக்களங்கள் மற்றும் அலு வலகங்களில் மேற்கொள்ளப் பட்டுவரும் அதேவேளை அந்த செயற்பாடுகளுக்கு உதவும் வகையிலேயே இந்த மொழிக் குழு ஆளுரின் ஆலோச னைக்கு அமைய நியமிக்கப்பட் டுள்ளது.

இதன் அடிப்படையில் இந்த மொழிக் குழுவின் தலைவராக யாழ்ப்பாண பல்கலைக்கழகத் தின் மொழியியல் ஆங்கிலத் துறையின் சிரேஷ்ட விரிவுரை யாளர் சுவாமிநாதன் விமல் நியமிக்கப்பட்டுள்ளதுடன் இக் குழுவின் உறுப்பினர்களாக பலாலி ஆசிரியர் பயிற்சி கலா சாலையில் முன்னாளர் அதிபர் எஸ்.பத்மநாதன், கோப்பாய் ஆசிரியர் கலாசாலையின் பிரதி அதிபர் எஸ்.லலீசன், யாழ் ஒஸ் மானியா கல்லூரியின் அதிபர் மொஹைதீன் ஹனி சேகு ராயீத், வடக்கு மாகாண கல்வித் திணைக் களத்தின் உதவிப் பணிப்பா ளர்(இரண்டாம் மொழி) திருமதி சுதர்ஷி பெர்னாண்டோ ஹப்பு கொட்டுவ ஆகியோர் இவ்வாறு வடக்கு மாகாண ஆளுநரினால் நியமிக்கப்பட்டுள்ளனர்.

இதன்படி வடக்கு மாகாணத் தின் அரச நிறுவனங்களில்



மொழிக் கொள்கைகளை அமுல் படுத்தும்போது எழும் பிரச்சினை கள் தொடர்பிலும் இந்தக் குழுவுக்கு அறிவித்து உரிய ஆலோசனை களையும் தீர்வுகளையும் பெற் றுக்கொள்ள முடியும். அத்தோடு இது தொடர்பான முறைப்பாடு கள், கோரிக்கைகள் மற்றும் ஆலோசனைகள் இருப்பின் அவற்றை தலைவர், மொழிக் குழு, ஆளுநர் செயலகம், பழைய பூங்கா, கண்டி வீதி, சுண்டிக்குளி, யாழ்ப்பாணம். என்ற முகவரிக்கோ அல்லது 0212219374 என்ற தொலைநகல் இலக்கத்துக்கோ அனுப்பி வைக்க முடியும்.

# வவுனியா புதூரில் ஆயுதங்கள் பல மீட்பு: கைதான 7 பேரில் இருவருக்குப் பிணை

வவுனியா,ஜன.16

வவுனியா, புதூர் பகுதியில் பிஸ்ரல் மற்றும் கைக்குண்டுகள் உள்ளிட்ட ஆயுதங்களை வீசிவிட்டு தப்பியோடிய நபர் தொடர்பில் தீவிர விசாரணை களை முன்னெடுத்து வரும் புளியங்குளம் பொலி ஸார் இச் சம்பவம் தொடர்பில் இரு பெண்கள் உட் பட 7 பேரை கைது செய்துள்ள நிலையில் இருவர் பிணையில் விடுவிக்கப்பட்டுள்ளனர்.

கடந்த 2 ஆம் திகதி புளியங்குளம், புதூர் பகுதி யில் சந்தேகத்துக்கிடமான நடமாட்டம் காணப் படுவதாக புளியங்குளம் பொலிஸாருக்கு இரகசியத் தகவல் கிடைத்தது. இதனையடுத்து அப்பகுதிக்கு சிவில் உடையில் நான்கு பொலிஸார் மோட்டார் சைக்கிளில் சென்றுள்ளனர். இதன்போது அவ்வீதி யில் சென்ற இனந்தெரியாத நபர் ஒருவர் தனது கையில் வைத்திருந்த பொதியை தூக்கி எறிந்து விட்டு அங்கிருந்து தப்பி ஓடிச் சென்றுள்ளார். தாம் அவரைத் துரத்திச் சென்ற போதும் அவர் தலை மறைவாகினார் எனப் பொலிஸார் தெரிவித்திருந் தனர். மறுநாள் காலையில் இருந்து மதியம் வரை இராணுவம், பொலிஸார் இணைந்து அப்பகுதி யில் சுற்றி வளைப்பு மேற்கொண்டு தேடுதல் நடத்தி யிருந்தனர்.

இந்நிலையில் குறித்த பொதியை பொலிஸார் பார்வையிட்டபோது அதனுள் கைத்துப்பாக்கி, அதற்குரிய ரவைகள், கைக்குண்டுகள் நான்கு, ஸ்மாட் கைத்தொலைபேசிகள் 2, அதற்குரிய மின்கலத்துடனான மின் வழங்கி என்பன கண்டு பிடிக்கப்பட்டன. இதனை அடிப்படையாகக் கொண்டு விசாரணைகளை முன்னெடுத்து வரும் பொலி ஸார் குறித்த சம்பவம் தொடர்பில் 7 பேரை கைது செய்துள்ளனர்.

இவர்களை வவுனியா மாவட்ட நீதிமன்றில் முற்படுத்திய நிலையில் இருவருக்கு பிணை வழங்கப்பட்டுள்ளது. பெண் ஒருவர் உட்பட ஐவ ரைப் பயங்கரவாதத் தடுப்பு பிரிவு பொலிஸார் தமது கட்டுப்பாட்டில் எடுத்து தொடர்ந்தும் விசாரணை களை முன்னெடுத்து வருகின்றனர். (எ – 100)

# இலங்கையர் அனைவருக்கும் மின் சுகாதார அட்டைகள்




கொழும்பு,ஜன.16

இலங்கையில் வாழும் 21 மில்லியன் மக்களுக்கும் மின் – சுகாதார அட்டைகளை (e - Health Card ) விநியோகிக்கும் பணி அடுத்த மாதம் முதல் ஆரம்பிக்கப்படும் என்று சுகாதார, போசணைகள் மற்றும் சுதேச வைத்திய அமைச்சர் ராஜித சேனாரட்ன தெரிவித்துள்ளார்.

களுத்துறை பொது வைத் தியசாலை மற்றும் பண்டாரகம பிராந்திய வைத்தியசாலைகளை அடிப்படையாகக் கொண்டு இந்த மின் – அட்டைகள் விநியோகிக் கப்படவுள்ளன.

ஆறு மாதகாலப் பகுதிக்குள் அனைவருக்கும் இந்த மின் – அட்டைகளைப் பெற்றுக் கொடுக்க நடவடிக்கை எடுக் கப்படும் எனவும், இந்தியாவின் ஆந்திர பிரதேசத்தில் இவ்வாறு மின் – சுகாதார அட்டைகளைப் பெற்றுக்கொடுத்த நிறுவன மொன்றே இவ்வேலைத்திட் டத்தை இங்கு முன்னெடுக்க வுள்ளதாகவும் சுகாதார அமைச்சு தெரிவித்துள்ளது.

குறித்த மின் – சுகாதார அட்டையில் நோயாளி ஒருவரின் முழுமையான விவரங்கள் உள் ளடக்கப்பட உள்ளதால் நாட்டின் எந்தவொரு பிரதேசத்திலும், எந்தவொரு வைத்தியரிடமும் சிகிச்சைகளை பெற்றுக்கொள்ள முடியும் எனவும் அமைச்சு வெளியிட்டுள்ள அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது.

2018 ஆம் ஆண்டு ஏப்ரல் 7ஆம் திகதி உலக சுகாதார அமைப்பின் 71 வது ஆண்டு விழா இலங்கையில் நடை பெற்றபோது, இலங்கையில் மின் – சுகாதார அட்டைகளை அறிமுகம் செய்ய தீர்மானிக் கப்பட்டது.

புதிய தொழில்நுட்பங்கள் அறிமுகப்படுத்தப்படுவதன் மூலம் மக்களுக்குச் சேவை களை இலகுவாகப் பெற்றுக் கொள்ள முடியும். இதேவேளை, நாடு முழுவதும் உள்ள வைத் திய சாலைகளின் தரவுகளை கணனி மயப்படுத்தும் வேலைத் திட்டமொன்றும் ஆரம்பிக்கப்பட் டுள்ளது. இதன்மூலம் நோயா ளர்களுக்கு சிறந்த சேவையை பெற்றுக்கொடுப்பதே தமது இலக்கு எனச் சுகாதார அமைச் சர் மேலும் தெரிவித்துள் ளார்.

(எ)

## நாளை

17.01.2019
வியாழக்கிழமை
நட்சத்திரம் : கார்த்திகை மு.ப 10.21 வரை
திதி :ஏகாதசி மு.இ 06.56வரை
சுபநேரம் : 08.05 - 09.35 வரை
இராகுகாலம் : 02.05 - 03.35 வரை

காலைக்கதிர்
Kalaikkathir



# 70 ஆவது ஆண்டு பூர்த்தியை முன்னிட்டு யாழ். மாநகர சபையில் விசேட நிகழ்வு





யாழ்ப்பாணம்,ஜன.16

யாழ் மாநகரசபை ஸ்தாபிக்கப்பட்டு 70 ஆண்டுகள் பூர்த்தியாகின்றமையை முன்னிட்டு நேற்றுமுன்தினம் திங்க ளன்று காலை 9.00 மணியளவில் யாழ் மாநகர சபையில் விசேட நிகழ்வொன்று இடம்பெற்றது.

இந் நிகழ்வில் வடக்குமாகாண முன் னாள் அவைத்தலைவர் சீ.வீ.கே. சிவ ஞானம் பிரதம விருந்தினராக கலந்து சிறப்பித்தார். அத்துடன், யாழ் மாநகர முதல்வர் இம்மானுவல் ஆனல்ட், பிரதி முதல்வர் து.ஈசன், மாநகரசபை உறுப்பி னர்கள், மாநகர ஆணையாளர், பிரதி ஆணையாளர், சிரேஷ்ட உத்தியோகத் தர்கள், ஊழியர்கள், திணைக்கள தலை வர்கள், ஊடகவியலாளர்கள் உள்ளிட் டோர் கலந்து கொண்டமை குறிப்பிடத்தக்க தாகும்.

இந் நிகழ்வில் கலந்து கொண்டு, நிகழ்வை சிறப்பித்த யாழ் மாநகர முதல் வர் இம்மானுவல் ஆனல்ட் தனது உரை யில் யாழ் மாநகர சபையின் 70 ஆண்டு கால பூர்த்தியை முன்னிட்டு ஏற்பாடு செய்யப்பட்ட நிகழ்வில் வருகை தந்து நிகழ்வை சிறப்பித்த வடக்கு மாகாண சபையின் முன்னாள் அவைத்தலைவர் சீ.வீ.கே. சிவஞானம் மாநகர ஆணையா ளராக செயற்பட்ட காலத்தின் நினைவுகள், மாநகரத்திற்கான அவரது 15 வருடத் திற்கு மேற்பட்டதான அர்ப்பணிப்பான சேவைகள் குறித்து நினைவு படுத்தினார்.

மேலும் "மாநகரசபைக்கே உரித்தான இடத்தில் புதிய மாநகரசபைக் கட்டடத் தொகுதியை அமைப்பதற்கான ஆரம்ப முயற்சிகளை இந்தக் காலாண்டுக்குள்ளே நடத்தி முடிப்பதற்குரிய பூர்வாங்க நடவ டிக்கைகளை முன்னெடுத்து வருகின் றோம். அவ்வாறே மாநகரத்தினுடைய பல்வேறு நிகழ்வுகளை, நகர அபிவிருத்தி அதிகார சபையின் அனுசரணையோடு பல்வேறு திட்டங்கள், உலக வங்கியின் அனுசரணையோடு பல்வேறு திட்டங்கள் மற்றும் இன்னும் பல அபிவிருத்தி திட்டங் களை நடைமுறைப்படுத்துவதற்குரிய ஆண்டாக இந்த ஆண்டை நாங்கள் பார்க்கின்றோம்.

"இம் மாநகரசபையினை மக்கள் பிரதி நிதிகளாக நாம் பொறுப்பெடுத்து 9 மாதாங்களாகின்ற இக் காலப்பகுதியில் நாங்கள் உட்பட உறுப்பினர்களும், ஏனையோரும் பல்வேறு விடயங்களை அவதானித்திருக்கின்றோம். மாநகரசபை யில் பல் வேறு விடயங்கள் அது நிர்வாக விடயங்களாக இருந்தாலும் சரி, ஏனைய நடைமுறைகள் சார்ந்த நடவடிக்கைகளா னாலும் சரி அவற்றில் பல கருமங்கள் திருத்தப்படவேண்டி இருக்கின்றன, முன் னோக்கி நகர்த்தப்பட வேண்டி இருக்கின் றன. ஆகவே அவற்றை நாங்கள் இனங் கண்டுள்ளோம்.

"எங்களுடைய உத்தியோகத்தர்கள், ஊழியர்கள் மன நிலையிலே மாற்றங் களைக் கொண்டுவர வேண்டும் என்ப தற்காக உள்ளகரீதியாக சில முன்னேற்பாடு களை செய்திருக்கின்றோம். அதில் ஒன்று தான் எங்களுடைய மாநகரசபையின் பெண் ஊழியர்கள் ஒரே நிறத்திலான சேலைகளை அணிந்திருக்கின்றமையை மாநகரத்தின் அடுத்த முன்னோக்கி நகரக் கூடிய ஒரு சமிக்ஞையாக நாங்கள் பார்க் கின்றோம்.

"மாநகர சபைக்குத்தான் அதிகமான பயனர்கள் சேவைகளைப் பெற்றுக்கொள் வதற்காக வருகை தருகின்றனர். அவ்வா றான பயனர்களை நல்ல முறையில் நடாத்தி, அவர்கள் தமது தேவையை முழு மையாகப் பெற்றுக்கொள்ள முடியாத சந்தர்ப்பத்திலும் மாநகர வளாகத்தை விட்டு வெளியேறும்போது வெறுப் பஎ யாது, கௌரவமாக நடத்தப்பட்டு திருப்தி யாகத் தமது தேவையை முடிக்க முடியும் என்ற நம்பிக்கையுடன் அவர்கள் செல்ல வேண்டும் என்பதுதான் எனது பேரவா.

சேவை வழங்கும் உத்தியோகத்தர் கள் பல்வேறு சிக்கல்களுக்கும், பிரச் சினைகளுக்கும் முகம் கொடுப்பவர்க ளாக இருப்பீர்கள் அதில் மாற்றுக் கருத் துக் கிடையாது. ஆனால் சேவைகளை பெற வரும் பயனர்கள் மீது அவை காட்டப் படக்கூடாது. அவர்களை இன் முகத்தோடு வரவேற்று அவர்கள் திருப்தியடையும் விதமாக எமது சேவைகள் அமைய வேண் டும்." – எனக் கேட்டுக்கொண்டார்.

வட மாகாணசபை உருவாக்கிய மாகாண கீதம் மாகாணசபைக்கு வெளியே முதலாவதாக இசைக்கப்பட் டமையும் யாழ் மாநகரசபையிலே என் பதும் குறிப் பிடத்தக்கது.

(எ)

## ஜனாதிபதி வேட்பாளர் யார்? உடன்பாடு எட்டப்படவில்லை

### என்கிறார் விமல்

ஜனாதிபதி வேட்பாளர் யார் என்பது தொடர் பில் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன மற் றும் எதிர்க்கட்சி தலைவர் மஹிந்த ராஜபக்ஷ



ஆகியோர் இதுவரை யில் எவ்வித உடன் பாட்டுக்கும்வரவில்லை என நாடாளுமன்ற உறுப்பினர் விமல் வீரவன்ச தெரிவித் துள்ளார்.

ஜனாதிபதிக்கும் மஹிந்த ராஜபக்ஷ வுக்கும் இடையிலான ஒற்றுமையை கெடுக்கும் விதமாகவே இவ் வாறு ஜனாதிபதி வேட்பாளர் தொடர்பில் கருத் துக்கள் வெளியிடப்பட்டு வருகின்றன என்றும் அவர் தெரிவித்துள்ளார்.

இதேவேளை மஹிந்த ராஜபக்ஷ மட்டுமே ஜனாதிபதி வேட்பாளராக தகுதியுடையவர் என நாடாளுமன்ற உறுப்பினர் குமார வெல்கம தெரிவித்துள்ளமை குறிப்பிடத்தக்கது.

## அரச வைத்தியசாலைகளுக்கு வழங்கப்படவுள்ள அம்புலன்ஸ்கள்



நாடு முழுவதும் உள்ள 132 வைத் தியசாலைகளுக்குத் தேவையான அம்புலன்ஸ்களைப் பகிர்ந்தளிக்கும் நிகழ்வு எதிர்வரும் 18ஆம் திகதி வெள் ளிக்கிழமை கொழும்பு போதனா வைத் தியசாலை வளாகத்தில் நடைபெற வுள்ளது.

சுகாதார, போசணைகள் மற்றும் சுதேச வைத்திய அமைச்சர் ராஜித சேனா ரத்னவின் தலைமையில் நடை பெறவுள்ள இந்நிகழ்வில் இங்கிலாந் தின் Ford நிறுவனத்தினால் உற்பத்தி செய்யப்பட்ட 132 அம்புலன்ஸ்கள் பகிர்ந்தளிக்கப்படவுள்ளன.

இந்தத் திட்டத்துக்காக 250கோடி ரூபா செலவிடப் பட்டுள்ளதாக சுகா தார அமைச்சு தெரிவித்துள்ளது.

இதற்கமைய மாகாண சபை மருத் துவமனைகளுக்கு 103 அம்புலன்ஸ் களும், மத்திய அரசு மருத்துவமனை களுக்கு 27 வண்டிகளும், ஆயுர்வேத திணைக்கள மருத்துவமனைகளுக்கு 2 அம்புலன்ஸ்களும் பகிர்ந்தளிக்கப் படவுள்ளன என சுகாதார அமைச்சு குறிப்பிட்டுள்ளது.

அதேவேளை இதற்கு மேலதிக மாக ஜேர்மனியின் பென்ஸ் நிறுவனம் தயாரித்த 100 அம்புலன்ஸ்களும் விரைவில் மருத்துவமனைகளுக்கு பகிர்ந்தளிக்கப்படவுள்ளன. ஏற்கனவே 40 அம்புலன்ஸ்கள் மருத்துவமனை களுக்கு ஒப்படைக்கப்பட்டுள்ளன எனவும் சுகாதார அமைச்சின் ஊடகப் பிரிவு தெரிவித்துள்ளது.

(எ)

## வாழ்வாதார உதவிக்கு இலஞ்சம் பெற்ற அரச அதிகாரி கைது!



கிளிநொச்சி,ஜன.16

கிளிநொச்சி – பூநகரி பகுதியில் பாதிக்கப்பட்ட குடும்பம் ஒன்றுக்கு பிரதேச செயலகத்தினால் வழங்கிய உதவிக்கு, இலஞ்சம் பெற முயன்ற பிரதேச செயலக உத்தியோகத்தர் ஒருவர் கைது செய்யப்பட்டுள்ளார்.

அந்த நபர் கடந்த (ஞாயிற்றுக் கிழமை) இலஞ்ச ஊழல் ஒழிப்பு ஆணைக்குழுவினால் கைது செய்யப்பட்டுள்ளார்.

கிளிநொச்சி, பூநகரி பகுதியில் இலஞ்சம் பெறுவதாக, இலஞ்ச ஊழல் ஒழிப்பு ஆணைக்குழுவுக்கு கிடைத்த முறைப்பாட்டின் அடிப்படை யில் அங்கு சென்ற அதிகாரிகள் அவரை கைது செய்துள்ளனர்.

பாதிக்கப்பட்ட குடும்பம் ஒன்றுக்கு வாழ்வாதார உதவி வழங்குவதற்கு இலஞ்சம் தருமாறு பொருளாதார உத்தியோகத்தர் கேட்டதற்கிணங்க பணம் வழங்கப்பட்ட போது, குறித்த அரச உத்தியோகத்தர் கைது செய்யப்பட்டுள்ளார்.

சம்பவம் தொடர்பில் இலஞ்ச ஊழல் ஒழிப்பு ஆணைக்குழுவினர் மேலதிக விசாரணைகளை முன்னெ டுத்துள்ளனர்.

இதேவேளை, குறித்த குற்றச் சாட்டுத் தொடர்பில் விசாரணை மேற் கொண்டு அறிக்கையினை அனுப்பி வைப்பதாக இலஞ்ச ஊழல் ஒழிப்பு ஆணைக்குழுவின் அதிகாரிகள் தெரிவித்ததாக பிரதேச செயலர் கிருஷ்னேந்திரன் தெரிவித்துள் ளார்.

## பால் பண்ணையாளர்களின் வாழ்வாதாரம் பாதிப்பு

திருகோணமலை – கிண்ணியா பிரதேசத் தில் அண்மைக்காலமாக மாடுகள் இறந்து வருகின்றமை பால் பண்ணையாளர்களின் வாழ்வாதாரத்தைப் பாதித்துள்ளது.

கடந்த சில வாரங்களாக கிண்ணியா பிரதேசத்தில் மாடுகள் அதிகளவில் இறந்து வரும் நிலையைத் தொடர்ந்து அப்பிரதேசத் தின் பால் உற்பத்தி பாதிப்படைந்துள்ளது.

அதிகளவில் பால் சேகரிக்கப்படும் இடங் களில் ஒன்றான சூரங்கல் பால் சேகரிப்பு நிலை யத்தில் அண்மைக்காலமாக சுமார் 600 லீற்றர் வரையான பால் மாத்திரமே சேகரிக்கப்படு கின்றது.

இந்நிலையத்தில் நாளாந்தம் சுமார் 6000 முதல் 8000 லிற்றர் வரையில் பால் சேகரிக் கப்பட்டு வந்தமை சுட்டிக்காட்டத்தக்கது.

## 20 வீத ஆண்களும் 10 வீத பெண்களும் இலங்கையில் பாலியல் வன்புணர்வு

கொழும்பு,ஜன.16

இலங்கையில் இருபது வீத ஆண்களும்,பத்துவீத பெண்களும் பாலியல் வன்புணர்வுக்கு உள்ளாக் கப்படுகின்றனர் எனத் தேசிய சிறுவர் பாதுகாப்பு அதிகார சபையின் முன் னாள் தலைவர் பேராசிரியர் ஹரீந்திர டி சில்வா தெரிவித்துள்ளார்.

இதேவேளை கடந்த 2015 ஆம் ஆண்டு 1582 பாலியல் வன்புணர்வு சம்பவங்கள் இடம்பெற்றுள்ளன என களனி பல்கலைக்கழகத்தின் மருத் துவ பீட பேராசிரியர் அஸ்வினி பெர் னாண்டோ தெரிவித்தார்.

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவிக்கையில் –

96 வீதமான வன்புணர்வு சம்ப வங்கள், பாதிக்கப்பட்டவர்களுக்கு நன்கு தெரிந்தவர்களாலும் அவர்க ளுக்கு மிகவும் தெரிந்த இடங்களி லும் இடம்பெற்றுள்ளன.

இவ்வாறான வன்புணர்வு சம்ப வங்கள் தாய் இல்லாத குடும்பங் கள்,பெற்றோர்கள் விவாகரத்து மற் றும் போதைக்கு அடிமையான தந் தையர்களாலேயே இடம்பெற்றுள்ளன.

இலங்கையில் 51 வீதமான சிறு வர்களே பெற்றோருடன் வாழ்கின் றனர்.

பாதிக்கப்பட்டவர்களுக்கு உளவி யல் ரீதியான புனர்வாழ்வு அவசியம் எனவும் அவர் வலியுறுத்தியுள்ளார்.

# ஐயப்பனை தரிசித்த மருமகளை கொடூரமாகத் தாக்கிய மாமியார்



சென்னை,ஜன.16

சபரிமலையில் உள்ள ஐயப்பன்கோயிலுக்குசென்று தரிசனம் செய்து பெரும் பரபரப்பை ஏற்படுத்திய பெண் கடந்த இரு வாரங்களுக்குப் பின் வீடுதிரும்பிய நிலையில் மாமியார் கொடுமைக்கு ஆளாகியுள்ளதாகச் செய்திகள் வெளியாகியுள்ளன.

கடந்த 2ஆம் திகதி பிந்து, கனகதுர்கா ஆகிய இரு பெண்கள் சபரிமலைக்கு பொலிஸ் பாதுகாப்புடன் சென்று ஐயப்பனைத் தரிசனம் செய்து பரபரப்பை ஏற்படுத்தினார்கள்.

இந்நிலையில், நேற்றுமுன்தினம் காலை கனகதுர்கா தனது வீட்டுக்குச் சென்றுள்ளார். அப்போது, வீட்டில் இருந்த கனகதுர்காவின் மாமியாருக்கும், கனகதுர்காவுக்கும் தகராறு ஏற்பட்டுள்ளது. சபரிமலை ஐயப்பன் கோயிலுக்குச் சென்றது குறித்து கனகதுர்காவைக் கண்டித்த அவரின் மாமியார் அவர் மீது தாக்குதல் நடத்தியுள்ளதாகக் கூறப்படுகிறது. அப்போது இருவரும் ஒருவரையொருவர் தாக்கிக்கொண்டனர் என செய்திகள் தெரிவிக்கின்றன.

இதில் கனகதுர்காவுக்கு காயம் ஏற்பட்டு மருத்துவமனையில் சேர்க்கப்பட்டார். அங்கு அவருக்கு பொலிஸ் பாதுகாப்பு அளிக்கப்பட்டுள்ளது.

# பாகிஸ்தான் இராணுவத்தினர் சூடு; இந்திய எல்லை படை வீரர் காயம்

ஜம்மு,ஜன.16

ஜம்மு – காஷ்மீர் மாநிலத்தில் உள்ள எல்லைப் பகுதியில் பாகிஸ்தான் இராணுவத்தினர் நேற்று அத்துமீறி நடத்திய துப்பாக்கிச் சூட்டில் இந்திய எல்லை பாதுகாப்புப் படை வீரர் காயமடைந்தார்.

ஜம்மு பகுதிக்குட்பட்ட ரஜோரி மாவட்டம், சுந்தர்பானி செக்டர் பகுதியில் உள்ள இந்திய கண்காணிப்பு சாவடிகளின் மீது நேற்றுக் காலை சுமார் பத்து மணியளவில் பாகிஸ்தான் இராணுவத்தினர் திடீரென்று துப்பாக்கிகளால் சுட்டு தாக்குதல் நடத்தினர்.



இதேபோல், கத்துவா மாவட்டத்தில்உள்ளசர்வதேச ஹிராநகர் செக்டர் எல்லைக்கோட்டுப் பகுதியில் பாகிஸ்தான் படைகள் நடத்திய துப்பாக்கிச் சூட்டில் இந்திய எல்லைப் பாதுகாப்புப் படை வீரர் ஒருவர் காயமடைந்தார்.

இப்பகுதியில் தொடர்ந்து துப்பாக்கிச் சண்டை நீடித்து வருவதாக இராணுவ வட்டாரங்கள் தெரிவித்துள்ளன.

# பா. ஜ.க.வுக்கு பாடம் கற்பிப்பதே பகுஜன் சமாஜ் கட்சியின் நோக்கம்

## பிறந்த தினத்தில் மாயாவதி சபதம்



லக்னோ,ஜன.16

2019 நாடாளுமன்ற தேர்தலில் பாரதீய ஜனதாவுக்கு பாடம் கற்பிப்பதே பகுஜன் சமாஜ் கட்சியின் நோக்கம் என பகுஜன் சமாஜ் கட்சி தலைவர் மாயாவதி கூறினார்.

பகுஜன் சமாஜ் கட்சியின் தலைவர் மாயாவதி நேற்றுமுன்தினம் தனது 63 வது பிறந்த நாளை கொண்டாடினார். பிறந்த நாள் பரிசாக கூட்டணியை வெற்றிபெறவைக்க வேண்டும் என தொண்டர்களை மாயாவதி கேட்டு கொண்டார்.

பகுஜன் சமாஜ் கட்சி தலைவர் மாயாவதி லக்னோவில் நிருபர்களுக்கு பேட்டி அளித்தார். அப்போது அவர் கூறுகையில் –

2019 நாடாளுமன்ற தேர்தலில் பாரதீய ஜனதாவுக்கு பாடம் கற்பிப்பதே பகுஜன் சமாஜ் கட்சியின் நோக்கம். சமீபத்தில் முடிவடைந்த 5 மாநில தேர்தல்களில் பாரதீய ஜனதாவுக்கு பாடம் புகட்டப்பட்டது. இது காங்கிரஸுக்கும் ஒரு பாடம் ஆகும். மூன்று மாநிலங்களில் காங்கிரஸ் அரசு மக்களின் பிரச்சினையை தீர்ப்பதாக வாக்குறுதி அளித்துள்ளது, ஆனால் அவ் வாக்குறுதிகளை நிறைவேற்றவில்லை என கூறினார்.

# கும்பமேளா திருவிழாவையொட்டி இலட்சக்கணக்கில் நீராடிய பக்தர்கள்

லக்னோ,ஜன.16

உத்தரபிரதேசம் மாநிலம் பிரயாக்ராஜ் நகரில் கும்பமேளா திருவிழாவையொட்டி மகர சங்கராந்தி தினமான நேற்று இலட்சக்கணக்கான பக்தர்களும் சாதுக்களும் திரிவேணி சங்கமத்தில் புனித நீராடி பரவசமடைந்தனர்.

உத்தரபிரதேசம் மாநிலத்தில் உள்ள பிரயாக்ராஜ் (பழைய பெயர் அலகாபாத்) நகரில் 12 ஆண்டுகளுக்கு ஒருமுறை கும்பமேளா திருவிழா நடைபெறும். இந்த கும்பமேளாவில் பங்கேற்பதற்காக நாட்டின் பல பகுதிகளில் இருந்து வந்த இலட்சக்கணக்கான பக்தர்களும் சாதுக்களும் பிரயாக்ராஜ் நகரில் திரண்டனர்.



இந்நிலையில், நேற்று மகர சங்கராந்தி பண்டிகையையொட்டி கங்கை, யமுனை, சரஸ்வதி ஆகிய மூன்று ஜீவநதிகள் சங்கமமாகும் 'திரிவேணி சங்கமம்' பகுதியில் புனித நீராடி (ஷாஹி ஸ்நானம்) பக்தி பரவசம் அடைந்தனர். (ஏ)

# நாட்டுக்காக தன்னலமற்ற சேவை: மோடிக்கு பிலிப் கோட்லெர் விருது



புதுடில்லி,ஜன.16

இந்தியாவின் வளர்ச்சிக்கு தன்னலமற்ற சேவையாற்றுவதற்காக பிரதமர் நரேந்திர மோடிக்கு பிலிப் கோட்லெர் சர்வதேச விருது வழங்கப்பட்டது.

அமெரிக்காவின் இல்லினாய்ஸ் மாகாணத்தில் நோர்த் வெஸ்ட் பல்கலைக்கழகத்தில் வர்த்தகத் துறையில் சந்தைப்படுத்தல் பிரிவின் பேராசிரியராக இருப்பவர் பிலிப் கோட்லெர். சர்வதேச அளவில் புகழ்பெற்ற பேராசிரியரான பிலிப் கோட்லெர் நினைவாக ஆண்டுதோறும் வர்த்தகத்துறையில் விருது வழங்கப்படுகிறது. நாட்டுக்கும் மக்களுக்கும் சிறப்பான சேவையாற்றும் தலைவர்களுக்கு இந்த ஆண்டு முதல் விருது வழங்க தீர்மானிக்கப்பட்டு, இந்தியாவின் வளர்ச்சிக்கு தன்னலமற்ற சேவையாற்றுவதற்காக இவ்விருதுக்கு பிரதமர் நரேந்திர மோடி தேர்வு செய்யப்பட்டார். அதன்படி, டில்லியில் பிரதமர் மோடிக்கு பிலிப் கோட்லெர் விருது வழங்கப்பட்டது. விருதையும் பாராட்டு பட்டயத்தையும் மோடி பெற்றுக் கொண்டார்.

# சீறிப்பாய்ந்த காளைகளை அடக்கிய இளம் காளையர்

அவனியாபுரம்,ஜன.16

தமிழர்களின் வீர விளையாட்டான ஜல்லிக்கட்டு மதுரை அவனியாபுரத்தில் நேற்று கோலாகலமாகத் தொடங்கியது. சீறிப்பாய்ந்த காளைகளை, இளம் காளையர் அடக்கி பரிசுகளை அள்ளிச் சென்றனர்.

தமிழர் திருநாளான தைத்திருநாளில் பாரம்பரியமாக ஜல்லிக்கட்டுப் போட்டி நடத்தப்பட்டு வருகிறது. அந்த வகையில், மதுரை மாவட்டம் அவனியாபுரத்தில் ஜல்லிக்கட்டு விழா நேற்று தொடங்கியது.

ஜல்லிக்கட்டு போட்டியைக் காலை 8



மணிக்கு மாவட்ட ஆட்சியர் நடராஜன் கொடியசைத்து தொடங்கி வைத்தார். ஒரு மணி நேரத்திற்கு 75 வீரர்கள் வீதம் சுழற்சி முறையில் வீரர்கள் களமிறக்கப்பட்டனர். சீறிவரும் காளைகளை அடக்கிய இளம் காளையருக்கு பரிசுகளும், வீரர்களிடம் பிடிபடாமல் தன் வீரத்தை பறைசாற்றிய காளைக்குப் பரிசுகளும் வழங்கப்பட்டன.

இந்த ஜல்லிக்கட்டு விழாவில் 500 மாடுபிடி வீரர்களும், 691 காளைகளும் பங்கேற்றன.

இந்நிலையில் இந்தப் போட்டில் பங்குபெற்ற 14 மாடுபிடி வீரர்கள் படுகாயமடைந்துள்ளனர். அவர்களை மீட்ட சக வீரர்கள் அவர்களை அங்கிருக்கும் மருத்துவர்கள் குழுவிடம் கொண்டு சென்றனர். அங்கு அவர்களுக்கு தீவிர சிகிச்சை அளிக்கப்பட்டது

# ஜெயலலிதாவின் கார்ச்சாரதி விபத்திலேயே உயிரிழந்தார்

சென்னை,ஜன.16

மறைந்த முன்னாள் முதல்வர் ஜெயலலிதாவின் கார் சாரதி கனகராஜ் மரணத்தில் எந்த மர்மமும் இல்லை. அவர் விபத்தில்தான் உயிரிழந்தார் என சேலம் சரக டிஐஜி செந்தில்குமார் விளக்கம் அளித்துள்ளார்.

சேலத்தில் நேற்று செய்தியாளர்களிடம் பேசிய டிஐஜி செந்தில்குமார், "2017ஆம் ஆண்டு ஆத்தூர் அருகே நடந்த சாலை விபத்தில் கனகராஜ் உயிரிழந்தார் என்பது நேரடி சாட்சி மற்றும் அறிவியல்பூர்வமான ஆதாரங்கள் உறுதியாகி இருக்கிறது. இருசக்கர வாகனத்தை ஓட்டி வந்த கனகராஜ் தவறான பாதையில் வாகனத்தில் சென்றதால் விபத்தில் சிக்கினார். அவரது இருசக்கர வாகனம் கார் மீது மோதியதால், கனகராஜ் உயிரிழந்தார் எனச் சாட்சிகள் தெரிவித்தன.

வாகனத்தை ஓட்டியபோது, கனகராஜ் மதுபோதையில் இருந்தமை, பிரேதப் பரிசோதனை அறிக்கையில் தெரியவந்தது. இதனால், கனகராஜ் மரணத்தில் எந்த மர்மமும் இல்லை. இந்த விபத்து எதிர்பாராமல் நிகழ்ந்ததாக கூறிய கனகராஜின் சகோதரர் தனபால், தற்போது சந்தேகம் எழுப்புவது ஏன் என தெரியவில்லை" என்றார்.



# ஒட்டுண்ணிகளால் சிறைபிடிக்கப்பட்ட மலைப்பாம்பு நீச்சல் குளத்திலிருந்து மீட்பு



ஆஸ்திரேலியாவில், உடல் முழுவதும் நூற்றுக் கணக்கான ஒட்டுண்ணிகள் நிறைந்த மலைப்பாம்பு ஒன்றினை பாம்பு பிடிப்பவர்கள் மீட்டுள்ளனர்.

குயின்ஸ்லாந்தின் கோல்ட் கோஸ்டில் ஒரு வீட்டின் பின்புறத்தில் உள்ள நீச்சல் குளத்தில் உடல் முழுவதும் ஒட்டுண்ணிகள் நிறைந்து உடல்நிலை சரியில்லாத நிலையில் மலைப்பாம்பு பிடிக்கப்பட்டது தொடர்பான காணொலி இணையத்தில் வெளியானது.

சிலந்திப்பேன் வகையைச் சார்ந்த உண்ணிகள் என்று அறியப்படும் சிறு பூச்சிகள் அதன் உடலின் மேல்தோலில் ஒட்டியிருந்தன.

பாம்பை மீட்ட பாம்பு பிடிக்கும் நபர் அதனை காட்டுயிர் மருத்துவமனையில் சிகிச்சைக்காக சேர்த்தார்.

மருத்துவர்கள் அதன் உடலில் இருந்து 500க்கும் மேற்பட்ட ஒட்டுண்ணிகளை நீக்கினர் என்றும் அதன் உடல்நிலை சீராகும் என்று எதிர்பார்ப்பதாகவும் அதனை மீட்ட டோனி ஹாரிஸ் பி.பி.சியிடம் தெரிவித்தார்.

தன் தோலில் இருந்த பூச்சிகளால், அப்பாம்பு நீச்சல் குளத்தில் இறங்கியிருக்கும் என்று ஹாரிஸ் நம்புகிறார்.

அந்த மலைப்பாம்பு மிகவும் அசௌகரியமாக உணர்ந்திருக்கிறது. அதன் மீது வளர்ந்து கொண்டிருந்த உண்ணிகளால் அதன் முகம் வீங்கி இருந்தது என்றார் அவர்.

அப்பாம்பினை தூக்கும்போது, கற்கள் நிறைந்த பையை தூக்குவது போல இருந்ததாக அவர் குறிப்பிட்டார்.

பாம்புகள் உடலில் அவ்வப்போது உண்ணிகள் வருவது வழக்கம்தான் என குயின்ஸ்லாந்து பல்கலைக்கழகத்தின் இணை பேராசிரியர் பிரயான் ஃப்ரை தெரிவித்தார்.

எனினும், இவ்வளவு அதிக அளவிலான உண்ணிகளால்தான் அப்பாம்பிற்கு உடல்நிலை பாதிக்கப்பட்டுள்ளது அல்லது அதிக வெப்பத்தால் ஏற்பட்டது போல தெரிகிறது என்றும் அவர் கூறுகிறார்.

அந்த பாம்பின் உடல்நிலை மிகவும் மோசமாக இருந்திருக்கக்கூடும். மீட்கப்பட்டு சிகிச்சை அளிக்கப்படவில்லை என்றால் உயிர் பிழைத்திருக்குமா என்பது சந்தேகம்தான், என்றும் ஃப்ரை கூறினார்.

# கனடா வாசிக்கு சீனாவில் மரண தண்டனை; இரண்டு நாடுகளின் உறவுகளில் பாதிப்பு



றொறன்டோ,ஜன.16

கனடா வாசிக்கு சீனாவில் மரண தண்டனை விதிக்கப்பட்டு உள்ளது இதற்கு கனடா பிரதமர் கண்டனம் தெரிவித்து உள்ளார்.

2014 -இல் 36 வயதான றொபர்ட் சீனாவில் இருந்து ஆஸ்திரேலியாவுக்கு 227 கிலோ எடையுள்ள போதைப் பொருளை கடத்த முயன்றதாக கைது செய்யப்பட்டார். கடந்த நவம்பரில் இது தொடர்பாக அவருக்கு 15 ஆண்டுகள் சிறைத்தண்டனை விதிக்கப்பட்டது. ஆனால் தாலியன் நகரைச் சேர்ந்த ஓர் உயர் நீதிமன்றம் அவருக்கு நேற்று முன்தினம் மரண தண்டனை விதித்தது.

அமெரிக்காவின் வேண்டுகோளுக்கு இணங்க சீன பெருநிறுவனமான ஹுவாவேயை சேர்ந்த ஒரு முக்கிய அதிகாரியை கனடா கைது செய்தமையை அடுத்து, எதிர்பாராத விதமாக றொபர்ட் மீதான வழக்கு மீண்டும் விசாரிக்கப்பட்டு தண்டனை வழங்கப்பட்டு உள்ளது.

மரண தண்டனை தீர்ப்புக்கு எதிராக மேல்முறையீடு செய்ய றொபர்ட்டுக்கு 10 நாள்கள் அவகாசம் உள்ளது. அவர் மேல்முறையீடு செய்வார் என்று அவரின் வழக்கறிஞர் ரொய்ட்டர்ஸ் செய்தி நிறுவனத்திடம் தெரிவித்துள்ளார்.

மரண தண்டனை விதித்த சீன நீதிமன்றத்தின் தீர்ப்புக்கு கனடா பிரதமர் ஜஸ்டின் ட்ரூடோ தனது கண்டனங்களைத் தெரிவித்துள்ளார்.

இது குறித்து அவர் வெளியிட்ட அறிக்கையொன்றில், "ஓர் அரசாக இந்த தீர்ப்பு மற்றும் சூழல் எங்களுக்கு மிகவும் கவலை அளிப்பதாக உள்ளது. சீனா எங்கள் நாட்டை சேர்ந்தவருக்கு மரண தண்டனை விதித்துள்ள நிலையில், இது எங்கள் தோழமை நாடுகளுக்கும் கவலை அளிப்பதாக அமைகிறது" என்று ட்ரூடோ கூறியுள்ளார்.

(எ)

# வெனிசுலாவில் சபாநாயகர் கைது; அமெரிக்கா கடும் கண்டனம்



கராக்கஸ்,ஜன.16

வெனிசுலாவில் நாடாளுமன்ற சபாநாயகர் ஜுவான் கெய்டோ கைது செய்யப்பட்டதற்கு அமெரிக்கா உள்ளிட்ட நாடுகள் கடும் கண்டனம் தெரிவித்துள்ளன.

வெனிசுலா நாடாளுமன்றத்தில் முழுவதுமாக எதிர்க்கட்சியினர் ஆதிக்கம் செலுத்தி வருகிறார்கள். அவர்கள் நிகோலஸ் மதுரோ 2ஆவது முறையாக ஜனாதிபதி ஆவதற்கு கடும் ஆட்சேபனை தெரிவித்தனர்.

நிகோலஸ் மதுரோ கடந்த 10ஆம் திகதி உச்ச நீதிமன்றம் முன்னிலையில் 2ஆவது முறையாக அந்நாட்டின் ஜனாதிபதியாக பதவி ஏற்றுக்கொண்டார்.

இதற்கு எதிர்ப்புத் தெரிவித்து வரும் எதிர்க்கட்சிகள் நிகோலஸ் மதுரோ பதவி விலக வேண்டும் என்றும், புதிய தேர்தலை நடத்த வேண்டும் எனவும் வலியுறுத்தி வருகின்றன. இதற்கிடையில் நாடாளுமன்ற சபாநாயகரான ஜுவான் கெய்டோ, தான் ஜனாதிபதி ஆவதற்கு தயாராகி வருகிறார் என அறிவித்தார்.

இந்த நிலையில், தலைநகர் கராக்கசில் நடைபெறும் பேரணியில் பங்கேற்பதற்காக ஜுவான் கெய்டோ நேற்று முன்தினம் காரில் சென்றுகொண்டிருந்தார். அப்போது பாதுகாப்புப் படை வீரர்கள் அவரை தடுத்து நிறுத்தி கைது செய்தனர். இதனால் பெரும் பரபரப்பு ஏற்பட்டது. எனினும் கைது செய்யப்பட்ட சில மணி நேரங்களுக்கு பின்னர் அவர் விடுவிக்கப்பட்டார். இது எதிர்க்கட்சிகளை அச்சுறுத்தும் செயல் எனக் கூறி ஜனாதிபதி நிகோலஸ் மதுரோவுக்கு அமெரிக்கா உள்ளிட்ட நாடுகள் கடும் கண்டனம் தெரிவித்துள்ளன.

# ஆகாய கப்பல் சோதனை வெற்றி

லண்டன், ஜன.16

இங்கிலாந்தை சேர்ந்த ஐரோப்பிய விமான பாதுகாப்பு முகமை 'ஏர் லேண்டர்' என்று பெயரிடப்பட்ட உலகின் மிகப்பெரிய ஆகாய கப்பலைத் தயாரித்துள்ளது.

92 மீற்றர் உயரமும், 44 மீற்றர் அகலமும் கொண்ட இந்த ஆகாய கப்பல், கடந்த 2017ஆம் ஆண்டு பரிசோதிக்கப்பட்டபோது விபத்தில் சிக்கியது. இதில் பெண் ஒருவர் படுகாயமடைந்தார்.




அதன் பின்னர் இந்தத் திட்டம் கிடப்பில் போடப்பட்டதாக தெரிகிறது. இந்த நிலையில் தற்போது 25 மில்லியன் யூரோ செலவில் ஆகாய கப்பல் புனரமைக்கப்பட்டது.

அதனைத் தொடர்ந்து ஏர்லேண்டர் ஆகாய கப்பல் நேற்றுமுன்தினம் பரிசோதித்து பார்க்கப்பட்டது. இந்த சோதனை வெற்றிகரமாக அமைந்தது.

இதையடுத்து ஆகாய கப்பல் பயணிகளை ஏற்றிக்கொண்டு பறப்பது குறித்து ஆய்வு நடத்தப்பட்டு வருவதாக ஐரோப்பிய விமான பாதுகாப்பு முகமை தெரிவித்துள்ளது.

# ஈரானில் ராணுவ விமானம் விபத்து 15 பேர் பலி, ஒருவர் உயிர் தப்பினார்



தெஹ்ரான்,ஜன,16

ஈரானில் இராணுவ விமானம் விழுந்து நொருங்கி விபத்துக்குள்ளானதில் 15 பேர் சம்பவ இடத்திலேயே பரிதாபமாக உயிர் இழந்தனர்.

கிர்கிஸ்தான் நாட்டு இராணுவத்துக்கு சொந்தமான 'போயிங் 707' ரக சரக்கு விமானம் பிஷ்கெக் நகரில் இருந்து இறைச்சியை ஏற்றிக்கொண்டு ஈரான் தலைநகர் தெஹ்ரானுக்கு புறப்பட்டு சென்றது. இந்த விமானத்தில் விமானி உள்பட 16 பேர் இருந்தனர். தெஹ்ரானில் பாத் விமான நிலையத்துக்கு அருகே பறந்து கொண்டிருந்தபோது திடீரென விமானியின் கட்டுப்பாட்டை இழந்த விமானம் குடியிருப்பு பகுதியில் விழுந்து நொருங்கியது.

இதையடுத்து விமானம் தீப்பிடித்து எரிந்தது. இந்த கோர விபத்தில் விமானத்தில் இருந்த 15 பேர் சம்பவ இடத்திலேயே பரிதாபமாக உயிர் இழந்தனர். ஒருவர் மட்டும் அதிர்ஷ்ட வசமாக உயிர்தப்பினார். மோசமான வானிலை காரணமாக இந்த விபத்து நேரிட்டு இருக்கலாம் என கூறப்படுகிறது.

# விபத்துக்குள்ளான இந்தோனேஷிய விமானத்தின் இரண்டாவது கறுப்புப் பெட்டியும் மீட்கப்பட்டது

ஜகார்த்தா,ஜன.16

இந்தோனேசியாவில் கடந்த ஆண்டு விபத்துக்குள்ளான விமானத்தின் குரல் பதிவுக் கருவி அடங்கிய 2ஆவது கறுப்பு பெட்டி மீட்கப்பட்டது

இந்தோனேசியாவில் கடந்த ஆண்டு ஒக்டோபர் 29ஆம் திகதி தலைநகர் ஜகார்த்தாவில் இருந்து புறப்பட்ட லயன் ஏர் நிறுவனத்துக்கு சொந்தமான விமானம் ஜாவா கடலில் வீழ்ந்து நொருங்கியது. இதில் பயணம் செய்த 189 பேரும் உயிரிழந்தனர். விபத்து குறித்து விசாரணை நடந்து வருகிறது. விபத்துக்குள்ளான விமானத்தின் பாகங்களை தேடும் பணியும் நடந்தது. விமானத்தின் 2 கறுப்பு பெட்டிகளில் ஒன்று ஏற்கனவே மீட்கப்பட்டது.

இந்த நிலையில் குரல் பதிவுக் கருவி அடங்கிய விமானத்தின் 2ஆவது கறுப்பு பெட்டி கடலுக்கு அடியில் இருந்து நேற்று முன்தினம் மீட்கப்பட்டது



## இன்று தமிழர் தரப்புக்கான வானம் வெளித்திருக்கிறது

# சிங்கள மக்களுக்கு நம்பிக்கை ஏற்படுத்தி தீர்வை எட்டுவோம்!

கடந்த சனிக்கிழமை யாழ். வீரசிங்கம் மண்டபத்தில் 'கருத்துக்களால் களமாடுவோம்' என்ற தொனிப் பொருளில் நடைபெற்ற அரசியல் கருத்தரங்கில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் பேச்சாளரும் நாடாளுமன்ற உறுப்பினருமான எம்.ஏ.சுமந்திரன் தற்போதைய அரசியல் நிலைமைகளை தெளிவுபடுத்தி இருந்தார். அந்தப் பேச்சு குறித்து **ஆஸ்திரேலியாவில் இருந்து ப.தெய்வீகன்** வரைந்துள்ள கட்டுரை இங்கு பிரசுரமாகிறது.

யாழ்ப்பாணத்தில் கடந்த சனியன்று இடம்பெற்ற கூட்டத்தில் சுமந்திரன் ஆற்றிய பேச்சுக்கு வழக்கம்போல ஜடை பின்னி, பூ வைத்து பலர் தத்தமது விருப்பத்துக்கு ஏற்ப - தேவைகளுக்கு ஏற்ப - பொம்மைகளாட்டம் தூக்கியெறிந்து விளையாடுகிறார்கள். அதில் தமிழ்க் கூட்டமைப்பின் ஆதரவாளர்களும் அடக்கம்.

சுமந்திரனின் அந்த உரையை - அல்லது விளக்கமளிப்புக்களை - வெறுமனே ஏனைய ஆரசியல் கட்சிகளின் சேறடிப்புக்கு கொடுக்கப்பட்ட பதில்களாகவோ, சமூக வலைத்தளங்களில் சங்கு ஊதிக்கொண்டிருக்கும் சங்கி - மங்கிகளுக்கான பதில்களாகவோ பார்ப்பது மிக மிக அபத்தம்.

சுமந்திரனின் அந்தப் பேச்சு ஒரு இனம் சார்ந்த கேள்விகளுக்கான பதில்கள். தற்கால அரசியல் சூழ்நிலையில் ஒரு பொறுப்புவாய்ந்த அரசியல் தரப்பாக - ஏகோபித்த வாக்குகளைப் பெற்றுக்கொண்ட - அணியாக - மக்களுக்கு சென்றடைவதற்காக தமிழ் தேசியக் கூட்டமைப்பு முன்வைத்த விளக்கங்கள் என்றுதான் பார்க்கவேண்டும். தங்களின் மீது கல்வீசும் தரப்புக்கள் மக்களுக்கு மேல் கூட்டிவைத்திருக்கும் கருமேகங்களை கலைத்துவிடுவதற்காக முன்வைக்கப்பட்ட ஆழமான பேச்சு என்றும் சொல்லலாம்.

சுமந்திரனின் இந்தப்பேச்சில் நேரடியாக கொடுக்கப்பட்டிருக்கும் விளக்கங்களுடன் reading between the lines (RBL) என்று ஆங்கிலத்தில் சொல்லக் கூடிய - சொல்லாமல் சொல்லப்பட்டிருக்கும் பல செய்திகளும் உள்ளன. அவற்றில் முக்கியமானவற்றை மிகச்சுருக்கமாக இங்கே பகிர்ந்துகொள்ளலாம் என்று எண்ணுகிறேன்.

1) இலங்கையிலுள்ள தமிழ் மக்கள் ஓர் இனக்குழுமமாக தங்களை பிரகடனப்படுத்துவதற்கு சட்ட ரீதியான தகுதியுடையவர்கள் என்பதை சர்வதேச நியமங்களின் கீழ் நிரூபிக்கமுடியும். அவ்வாறான தகுதியுடைய ஒரு மக்கள் குழுமம் அடக்கப்படுகின்றபோது - அவர்களுக்குரிய உரிமைகள் மறுக்கப்படுகின்ற போது - அவர்கள் தங்களுக்குரிய சுயநிர்ணய உரிமையை வெளியகமாகப் பிரயோகித்துக்கொள்வதற்கு தகுதியைப் பெற்றுக்கொள்கிறார்கள். முன்பெல்லாம், சுயநிர்ணய உரிமை என்றால் ஒன்றுதான் என்று கூறிய சர்வதேச சட்டம், இன்று இந்த உள்ளக, - வெளியக சுயநிர்ணய உரிமை பிரயோகங்களை - practice of the internal or external self determinations - ஏற்றுக்கொண்டிருக்கிறது. தமிழ்மக்களும் அத்தகைய உரிமையை பெற்றுக்கொள்வதற்கான வாதத்தை முன்வைக்கமுடியும். ஆனால், பெறலாம் என்று கூறவில்லை.

*RBL - இதனைத்தான், சமாதான பேச்சுக்காலத்தின்போது 2006 இல் விடுதலைப்புலிகளின் மதியுரைஞர் அன்டன் பாலசிங்கமும் வார்த்தைக்கு வார்த்தை எடுத்துக்கூறினார். ஆனால், இதனை உள்ளூரில் ஊடகவியலாளர் சிவராம் மறுத்ததும் பாலசிங்கமும் பிழையான அர்த்தப்படுத்தல்களை சர்வதேச அரங்கில் முன்வைக்கிறார் என்று புலிகளின் தலைமை வரைக்கும் கொண்டு சென்று அதில் தலைமையை சாதுவாக நம்பிக்கைகொள்ளவைத்ததும் கடந்துபோன வரலாறுகள்.*

2) அங்கீகரிக்கப்பட்ட மக்கள் குழுமமான தமிழ் மக்கள் இத்தகைய சுயநிர்ணய உரிமையை பெற்றுக்கொள்வதற்கான வழியை நாடுவதற்கு, முதலில் உள்ளகமாக சரியான கட்டமைப்பொன்றைக் கொண்டிருந்தார்கள் என்பதையும் அந்தக் கட்டமைப்பினை ஏற்படுத்தும் முயற்சிகளில் பங்காற்றியிருக்கிறார்கள் என்பதையும் நிரூபிக்கவேண்டும். இந்தப் படிமுறையில், நாட்டு சட்டதிட்டங்களுக்கு ஏற்ப நடைமுறையில் உள்ள ஆட்சிக் கட்டமைப்பில் தமிழ் மக்கள் உளப்பூர்வமாக பங்குபற்றியிருப்பதையும் இருந்த போதும் அதில் அவர்களுக்கு பாரபட்சம் காட்டப்பட்டது, நீதி மறுக்கப்பட்டது ஆகியவற்றை நாங்கள் நிரூபிக்கவேண்டும்.



*RBL - அரசாங்கத்துடன் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு மேற்கொள்கின்ற பேச்சுக்கள், தற்போது பங்குபற்றுகின்ற புதிய அரசமைப்பு வரைவு முயற்சிகள், ஒட்டுமொத்த நாட்டுக்கு ஜனநாயக ரீதியாக பங்கம் ஏற்பட்ட சந்தர்ப்பங்களில் அதிலிருந்து அரசாங்கத்தை மீட்பதற்காக தமிழர் தரப்பு கொடுத்த ஆதரவுகள் அனைத்துமே தமிழர் தரப்பின் இந்த இதயசுத்தியான அரசியல் பிரக்ஞையை எடுத்துக்காட்டுவதற்கே ஆகும். தவிர, சிங்கள ஆட்சித்தரப்புக்களின் மீது கொண்ட தனிப்பட்ட காதலினால் அல்ல. ஆக, இதற்குப்பின்னரும் தமிழ் மக்களின் அபிலாஷைகளைப் பூர்த்திசெய்வதற்கு சிங்கள ஆட்சிக்கட்டமைப்பானது தவறுமாயின், சுயநிர்ணய உரிமையை உள்ளகமாகவோ - வெளியகமாகவோ பிரயோகிப்பதற்கான சர்வதேசநியமங்களை தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு பொறுப்போடும் நேர்த்தியோடும் பின்பற்றியிருக்கிறது என்பதை நிரூபிக்கக்கூடியதாக இருக்கும். மொத்தத்தில், இரண்டு வகையிலும் எது நடந்தாலும் அது தமிழ் மக்களுக்கு சாதகமான ஒரு நிலையை ஏற்படுத்தும் வகையிலேயே தமிழ்த் தேசியக்கூட்டமைப்பு பயணிக்கிறது.*

3) உள்ளக சுயநிர்ணய உரிமைக்கு தமிழ் மக்கள் பூரண உரித்துடையவர்கள் என்பதில் சர்வதேச சமூகம் மிகத் தெளிவான நிலைப்பாட்டிலிருக்கிறது. ஆனால் அதனை தமிழர் தரப்பு ஜனநாயக வழியில் சென்று அடைவதற்கு தயாராக வுள்ளது என்பதை நாங்கள் சர்வதேச சமூகத்துக்கு நிரூபிக்கவேண்டும். மென்வலுவின் மூலம்தான் இந்த விடயத்தை நாங்கள் அடையமுடியும். அதற்கு முதலில் நாங்கள் வன்முறை வழியை இனிமேல் நாடப்போவதில்லை - என்ற நம்பிக்கையை பரந்தளவில் ஏற்படுத்த வேண்டும். மென்வலுவையும் - வன்வலுவையும் கலந்து பிரயோகிக்கவும் முடியாது. பயணிக்கவும் முடியாது.

*RBL - கை தட்டு வாங்குவதற்காக அரசியல்செய்யமுடியாது. விடுதலைப்புலிகளின் தொடர்ச்சியான சக்திகள் நாங்கள் தான் - என்று போலியாக மக்களுக்கு காண்பித்துக்கொண்டு விசில் சத்தம் கேட்கவேண்டும் என்பதற்காக வீரம் காட்டமுடியாது. மக்களுக்கு உண்மையைச் சொல்லவேண்டும். சர்வதேச யதார்த்தங்களையும் உள்ளூர் நிலைப்பாடுகளையும் நேர்மையுடன் பேச வேண்டும்.*

4) பிராந்தியங்களின் ஒன்றியம் - என்ற அதி உச்ச அதிகாரங்களின்கூடிய தீர்வுப்பொதியை சிங்கள தேசம் நாடாளுமன்றத்துக்கு வரைவாக கொண்டுவந்த போது அதனை தமிழர் தரப்பு எதிர்த்தது. அதேபோல, ஒஸ்லோ உடன்படிக்கையில் சமஷ்டி - உள்ளக சுயநிர்ணய உரிமை என்ற வார்த்தை பயன்பாடுகளுடன் கொண்டுவரப்பட்டபோதும் அதனை நாங்கள் கைவிட்டோம். அதற்காக, விடுதலைப்புலிகளை நான் ஒரு போதும் குறை கூறமாட்டேன்.

விடுதலைப்புலிகள் வாய்ப்புக்களை தவறவிட்டுவிட்டார்கள் என்று குற்றஞ் சாட்டுவதாக இருந்தால் தந்தை செல்வாவையும் குறைகூறலாம். ஜீ.ஜீ.பொன்னம்பலத்தை குறை கூறலாம். அமிர்தலிங்கத்தை குறைகூறலாம். குறை கூறுவதால் நாங்கள் எதையும் அடையப்போவதில்லை. ஒவ்வொரு காலகட்டங்களிலும் ஒவ்வொரு அரசியல் தலைவர்கள் வந்து போயிருக்கிறார்கள். அவர்கள் ஒவ்வொரு விதமான அரசியல் முடிவுகளை எடுத்திருக்கிறார்கள். ஆனால், அவற்றையெல்லாம் இப்போது நாங்கள் கூடியிருந்து குறைகூறி விமர்சித்துக் கொண்டிருக்கமுடியாது. விமர்சிக்கவும் கூடாது. அது அந்தந்த காலப்பகுதியில் அவர்களது அரசியல் தீர்மானங்களின் பிரகாரம் மேற்கொள்ளப்பட்ட முடிவுகளாகும்.

## தமிழ்க் கூட்டமைப்பு நினைத்தால் ஒரே இரவில் ஆட்சியை கவிழ்க்கலாம்

ஆனால், அந்த தவறுகளை நாங்கள் மீளவும் இழைத்துவிடக்கூடாது என்பது தான் முக்கியம். அதுதான் வரலாற்றிலிருந்து கற்றுக்கொள்வது என்பதாகும்.

*RBL - சுமந்திரன் விடுதலைப் புலிகளுக்கு எதிரானவர் என்று கற்பூரச் சட்டி எடுப்பவர்கள். முகநூலில் அலகு குத்திக்கொண்டு ஆலுமா டோலுமா டான்ஸ் போட்டவர்கள் அனைவரும் பவுடரைப் போட்டுக்கொண்டு ஏணையில் போய்படுத்துக்கொள்ளவும். கொள்கைகள், நிலைப்பாடுகள் குறித்து விமர்சனங்கள் இல்லாமல் உலகில் எந்த இனமும் அரசியல் வெற்றிகளை ஈட்டியதில்லை.*

5) மென்வலு எவ்வாறு வெல்லும்?

தமிழர்களின் அரசியல் அபிலாஷைகள் காலத்துக்கு காலம் மாறுகின்றன. முதலில் சிங்களதேசமே சமஷ்டி என்று கூறியபோது அதனை நாங்கள் மறுத்தோம். பிறகு ஐம்பதுக்கு ஐம்பது என்று சொன்னோம். பிறகு நாங்களே சமஷ்டி என்றோம். பிறகு தனிநாடு என்றோம். ஆக, மக்கள் குழுமம், தேசம் போன்றவற்றுக்கான அர்த்தங்கள் உலகளாவிய ரீதியில் மாறிவருகின்றமையைப்போல தீர்வும் மாறக் கூடியது. சுயநிர்ணய உரிமைப்பிரயோகங்களும்மாறிவருகின்றன. அந்த எண்ணத்தையும் நாங்கள் மறந்து விட முடியாது. ஒருமித்த நாட்டுக்குள் வாழத் தயார் - என்று வார்த்தைகளில் வெளிப்படுத்திக்கொண்டு, மனதுக்குள் தமிழீழ கனவோடு வாழமுடியாது.

6) தீர்வு சிங்கள மக்களின் மனங்களையும் வெல்வதாக அமையவேண்டும். அவர்களுக்குரியதை நாங்கள் அபகரிக்கவில்லை என்பதையும் எங்களுக்குரியதை தடுத்துவைத்திருக்கவேண்டாம்என்பதையும்அவர்களிடம்தொடர்ந்து வலியுறுத்தி வருகிறோம். அந்த யதார்த்தத்தை அவர்கள் தற்போது படிப்படியாக உணர்கிறார்கள்.

*RBL - தமிழர்களுக்காக எடுக்கப்படும் தீர்வுக்கு அமெரிக்கா ஆதரவு கொடுத்தாலென்ன, ஆபிரிக்கா ஆதரவு கொடுத்தாலென்ன அந்த தீர்வினைக் கொண்டுவந்து வாழவேண்டிய நிலப்பகுதி சிங்கள மக்களை பெரும்பான்மையாகக் கொண்ட இலங்கை எனப்படுவதாகும்.*

*ஆக, அந்த தீர்வானது சிங்கள மக்களுக்கு சந்தேகங்களை ஏற்படுத்தாமலும் - கிடைக்கப்பெறும் தீர்வினை வைத்துக் கொண்டு ஆயுதப்போராட்டத்தை மீண்டும் தொடங்கிவிடுவார்கள் என்ற அச்சத்தை ஏற்படுத்தாமலும் - இருக்க வேண்டும். இந்த அடிப்படையை சிங்கள மக்களின் மனங்களில் ஆழமாக ஏற்படுத்துவது தமிழர் தரப்பினது பொறுப்பாகும். பல தசாப்தங்களாக ஏற்பட்டுவந்த இந்த இனமுரணை - சந்தேகங்களை - படிப்படியாக பரஸ்பரம் களைந்துகொள்ள வேண்டும். இது மிகவும் ஆரோக்கியமான வகையில் தற்போது நடைபெற்று வருகிறது.*

7) இன்று அரசியல்வாதிகள் செய்கின்ற அரசியலிலும் பார்க்க ஊடகவியலாளர்கள் செய்யும் அரசியல்தான் மோசமானது. மக்களின் மத்தியில் நம்பிக்கையை வளர்ப்பதற்கு முயற்சிகளை மேற்கொள்ளாமல் அவநம்பிக்கைகளை ஏற்படுத்துவதில்தான் அதிக சிரத்தையுடன் செயற்படுகின்றன.

8) தமிழர் தரப்பு இன்று மிகப்பலமாக இருக்கிறது. நாடாளுமன்றத்தில் மிகப்பலமாக இருந்துகொண்டிருக்கிறது. சர்வதேச சமூகத்திலும்கூட தமிழ் மக்களின் அரசியல் அபிலாஷைகளுக்காக முன்வைக்கப்படுகின்ற தீர்வுக்கு ஒருமித்த ஆதரவு இருக்கிறது. முப்பத்து மூன்று நாடுகள் விடுதலைப்புலிகளை தடை செய்து தமிழர்களின் தீர்வுக்காக போட்ட முட்டுக் கட்டைகள் அனைத்தும் நீங்கி, இன்று தமிழர் தரப்புக்கான அரசியல் வானம் வெளித்திருக்கிறது. ஆனால், அதனை நாங்கள் எப்போதும் சொல்லி சொல்லி வெளிக்காட்டிக்கொண்டிருக்க முடியாது. வெளிக்காட்டுவதன் மூலம் பாதகமான சூழ்நிலைகளை ஏற்படுத்தி விடக்கூடாது.

*RBL - நாடாளுமன்றத்தில் ரணில் அரசு இன்று தமிழர் தரப்பின் ஏகோபித்த ஆதரவோடு பெரும்பான்மையை பெற்று ஆட்சியமைத்திருந்தாலும் எந்நேரமும் தமிழ்க் கூட்டமைப்பு நினைத்தால் அந்த ஆட்சியைக் கவிழ்க்கலாம். இலங்கையின் அரசியல் துவாரத்தை சர்வதேச சமூகத்திற்கு ஒரே இரவில் காட்டிக் கொடுக்கலாம். கவனத்தைப்பெறலாம்.*

*ஆனால், சிங்கள மக்களுக்கு தமிழர் தரப்பின் மீது நம்பிக்கைய ஏற்படுத்த வேண்டும் என்று ஒரு பக்கம் வேலை செய்துகொண்டு, பையிலிருக்கும் கத்தியை எடுத்து அடிக்கடி வெளியே காட்டிக் கொண்டிருந்தால் அவர்கள் தமிழ் மக்களை தொடர்ந்தும் அவநம்பிக்கையோடும் அச்சத்துடனும் தான் பார்த்துக் கொண்டிருப்பர். ஆக, எங்களிடமுள்ள பலத்தையே பலவீனமாகவும் முன்னிறுத்திவிடக்கூடாது.*

*

# செம்மலை நீராவியடி பிள்ளையார் ஆலயத்தில் வழிபாடுகளை தடுத்த பௌத்த துறவிகள்

முல்லைத்தீவு,ஜன.16

முல்லைத்தீவு மாவட்டம் பழைய செம்மலை நாயாற்றுப் பகுதியில் உள்ள நீராவியடி பிள்ளையார் ஆலயத்தில் (14.01.19) நேற்று முன்தினம் செம்மலை கிராம மக்களால் ஏற்பாடு செய்த ஆண்டு பொங்கல் நிகழ்வும் அன்னதானநிகழ்வும் நடைபெற வுள்ளதாக அறிவிக்கப்பட்ட நிலையில் -

நேற்று முன்தினம் காலை பிரதேச தமிழ் மக்கள் பிள்ளையார் ஆலயத்திற்கு சென்று பொங்கல் வழிபாடுகளில் ஈடுபட்டனர் அவ்வேளைநீராவியடி பிள்ளையார் ஆலயத்தினை ஆக்கிரமித்து பௌத்தவிகாரையினை அமைத்துள்ள பௌத்த மதகுரு ஒருவர் தலைமையில் தென்பகுதியிலிருந்து வருகை தந்த 40க்கு மேற்பட்ட சிங்களவர்களும் பௌத்த மத குருமாரும் தமிழ்மக்களுக்கு இடைஞ்சல் ஏற்படுத்தும் வகையில் பொங்கல் பூசை வழிபாடுகளில் ஈடுபட்டவர்களுடன் தர்க்கத்தில் ஈடுபட்டுள்ளனர்.

மக்களை பொங்கல் வைக்க விடாமல் குறித்த பகுதியில் விகாரை அமைத்துள்ள விகாராதிபதி தடுக்க முற்பட்டுள்ளார். அதை அடுத்துஇரு தரப்புக்கும் இடையில் முறுகல் நிலை ஏற்பட்டுள்ளதை தொடர்ந்து விகாரைக்கு அருகில் உள்ள படையினர் மற்றும் படை அதிகாரிகள் குறித்த இடத்துக்கு வந்து பௌத்த மத குருமாரையும் சிங்கள மக்களையும் சமாதானப்படுத்தும் நடவடிக்கையில் ஈடுபட்டனர். அவ்வேளையில் முல்லைத் தீவு பொலிஸார் சம்பவ இடத்துக்கு வருகை தந்து விகாராதிபதியுடன் கலந்துரையாடலை மேற்கொண்டுவிட்டு ஒலிபெருக்கி மூலம் தமிழ் மக்கள் வழிபாடுகளை செய்தவேளை ஒலி பெருக்கி பாவிக்க தடை நீங்கள் ஆலயத்தில் ஒலிபெருக்கி பயன் படுத்தவேண்டாம் எனவும் கூறினர். பொங்கல் வழிபாடுகளை மேற்கொண்ட பெண்கள், சிறுவர்கள் அனைவரையும் புகைப் படங்களை எடுத்து தமிழ் மக்களின் வழிபாடுகளை மேற் கொள்ள விடாது இடையூறுகள் ஏற்படுத்தியிருந்தனர்.



நேற்று முன்தினம் காலை இடம்பெற்ற இந்த முறுகல் நிலையின் போது செய்திசேகரிக்கும் பணியில் இருந்த ஊடகவியலாளர்களின் பணிக்கு இடையூறு ஏற்படுத்தும் விதமாக புகைப் படங்களை எடுத்து பொலிஸார் செயற்பட்டிருந்ததும் ஊடக வியலாளர்களுடன் தர்க்கத்தில் ஈடுபட்டனர் .

ஆலயம் பௌத்த ஆலயம் என்றும் அது பௌத்த மதத்துக் குரிய இடம் என்றும் அதில் தமிழ் மக்கள் பொங்கல் வழிபாடுகளை மேற்கொள்ளமுடியாது என்றும் தெற்கில் இருந்து வருகைதந்த பௌத்த துறவிகளும் பெரும் பான்மை சமூகம் சார்ந்தவர்களும் சர்ச்சையில் ஈடுபட்டனர். அவ்வேளைபொலிஸாரின்தலையீட்டினை தொடர்ந்து பிரச்சினை கட்டுப்பாட்டுக்குள் கொண்டுவரப்பட்டு செம் மலை கிராம மக்கள் பிள்ளையார் ஆலயத்தில் வழிபாடுகளை மேற்கொண்டனர்.

இந்நிலையில் குறித்த பிள்ளையார் ஆலயத்தில் நடைபெறும் பொங்கல் நிகழ்வுக்காக தமிழ் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர்களான சாந்தி சிறீஸ்கந்தராசா,சிவமோகன்,சாள்ஸ்நிர்மலநாதன் மற்றும் முன்னாள் வடமாகாண சபை விவசாய அமைச்சர் க.சிவநேசன், கரைதுறைப்பற்று பிரதேசசபை தவிசாளர், பிரதேச சபை உறுப்பினர்கள் ஆகியோர் ஆலய பொங்கல் நிகழ்வில் கலந்து கொண்டனர் .

பொங்கல் நிகழ்வும் அன்னதான நிகழ்வும் நடைபெற்று தொடர்ந்து குறித்த பிள்ளையார் ஆலயத்தினை புனரமைப்பதற்கான அடிக்கல் நடும் நிகழ்வும் நடைபெற்றது .இந்த அடிக்கல் நடும் நிகழ்வினை குறித்த விகாரையின் விகாராதிபதி தடுத்து நிறுத்த முற்பட்டிருந்த நிலையில் மக்கள் தொடர்ந்தும் அடிக்கல் நடும் நிகழ்வை தடையின்றி செய்தனர் .

தெற்கில் இருந்து வந்த "இலங்கையினை பாதுகாப்போம்" என்ற ஜனாதிபதி செயலகத்துடன் இணைந்து செயற்படும் ஒரு பௌத்த அமைப்பினை சேர்ந்த 40க்கும் மேற்பட்டவர்களே நீராவியடிப்பிள்ளையார் ஆலயப்பகுதிக்கு சென்று குழப்ப நிலையினை ஏற்படுத்தியுள்ளதாக தெரியவந்துள்ளது.

(எ)

## வவுனியா - மடுக்குளத்தில் வெடிபொருள்கள் மீட்பு



வவுனியா மடுக்குளம் பகுதியில் உள்ள தோட்டக் காணியிலிருந்து வெடிபொருள்களை பூவரசங்குளம் பொலிஸார் நேற்றுமுன்தினம் மீட்டுள்ளனர்.

சம்பவம் தொடர்பாக மேலும் தெரியவருவதாவது -

கடந்த ஒரு வாரத்துக்கு முன்பாக வவுனியா மடுக்குளம் பகுதியில் உள்ள தனியார் காணியை அதன் உரிமையாளர் உழவியந்திரம் மூலம் பண்படுத்தியுள்ளார். பண்படுத்தப்பட்ட குறித்த காணியில் சிறுவன் ஒருவன் விளையாடச் சென்ற நிலையில் உரப்பை ஒன்றில் சுற்றிவைக்கப்பட்ட நிலையில் சந்தேகத்துக்கிடமான பொருள்கள் இருக்கின்றமையை அவதானித்து தனது தந்தைக்கு தெரியபடுத்தியுள்ளான்.

பின்னர் குறித்த விடயம் பூவரசங்குளம் பொலிஸாருக்கு தெரியப்படுத்தப்பட்ட பின் சம்பவ இடத்துக்கு விரைந்த பொலிஸார் அந்த உரப்பையினை சோதனை செய்து பார்த்த போது மூன்று கைக்குண்டுகள் மற்றும் ரி - 56 ரக துப்பாக்கிக்கு பயன்படுத்தப்படும் ரவைகள், ஹோல்சர் என்பவற்றை மீட்டுள்ளனர்.

## வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட முல்லை மக்களுக்கு கொழும்பில் சேகரித்த பொருள்கள் விநியோகம்

முல்லைத்தீவு,ஜன.16

இயற்கை அனர்த்தத்தினால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு கொழும்பு வெள்ளவத்தைப்பகுதியில் உள்ள குரே மாவத்தையிலுள்ள தர்மசாந்தி விகாரையில் சேகரிக்கப்பட்ட பொருள்கள் மற்றும் கடந்த 11 ஆம் திகதி வெள்ளவத்தை இராமகிருஷ்ணா பாதை தொடக்கம் பம்பலப்பிட்டி வரை 50 பெத்த துறவிகள் சேகரித்த பொருள்கள் கிளிநொச்சி, முல்லைத்தீவு மாவட்டங்களில் வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட குடும்பங்களுக்கு தலா 1250 ரூபா பெறுமதியான பொங்கல் பொருள்கள் வழங்கும் நிகழ்வு புதுக்குடியிருப்பு பகுதியில் தொடங்கி வைக்கப்பட்டுள்ளது.



புதுக்குடியிருப்பு பகுதியில் வீடு ஒன்றில் நடைபெற்ற இந்த நிகழ்வில் புதுக்குடியிருப்பு பிரதேசத்துக்கு உட்பட்ட 100 பெண்களை தலைமைத்துவமாக கொண்ட குடும்பங்களுக்கு வழங்கப்பட்டுள்ளன.

வடக்கு கிழக்கு சமூக நல்லிணக்க அமைப்பின் ஏற்பாட்டில் இலங்கையினை பாதுகாப்போம் என்ற அமைப்பினால் இந்த ஒழுங்கமைப்புக்கள் மேற்கொள்ளப்பட்டிருந்தன.

இதில் வடக்கு ,கிழக்கு சமூக நல்லிணக்க அமைப்பின் தலைவர் தி.அருட்செல்வம் தலைமையில் நடைபெற்ற பொருள்கள் வழங்கும் நிகழ்வில் இலங்கையினை பாதுகாப்போம் அமைப்பின் தலைவர் ஆனந்த சாகரதேரர் மற்றும் அந்த அமைப்பின் அங்கத்தவர்கள் ஆகியோர் கலந்துகொண்டு மக்களுக்கான பொங்கல் பொருள்களை வழங்கினர்.

## இரண்டாவது ஆண்டு நிறைவும் சான்றிதழ் வழங்கும் வைபவமும்

வல்வெட்டித்துறை,ஜன.16

வல்வை ஆனந்தா யோகலாயாவின் இரண்டாவது ஆண்டுநிறைவு விழாவும் சான்றிதழ் வழங்கும் வைபவமும் எதிர்வரும் 27 ஆம் திகதி நெடியகாட்டில் அமைந்துள்ள கணபதி மஹாலில் இடம் பெறவுள்ளது.

இந்நிகழ்வில் பிரதம விருந்தினராக யாழ்.பல்கலைக்கழக சிவில் பொறியியல் பீடாதிபதி சு.சிவக்குமார்,சிறப்பு பங்காளர்களாக யோக மகா ரத்தினா செல்வி ஷாலினி,யோக ரத்தினா கோபு காளிமுத்து ஆகியோர் கலந்து சிறப்பிக்கவுள்ளனர்.

நிகழ்வில் யோகா சான்றிதழ் வழங்குதல்,எளிமையான கூட்டு யோகாசன செயல் வடிவங்கள் மேடையில் குழுவினரால் செய்து காண்பித்தல்,காணொலிக் காட்சிகள்,சிறப்புரைகள்,என்பன இடம்பெறவுள்ளன.

## கடற்கரையோர துப்புரவுப் பணி வல்வை நகரசபையால் ஆரம்பம்



வல்வை நகர சபையால் கடற்கரையோரத்தை துப்புரவாக்கும் நிகழ்ச்சித் திட்டம் ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

இதன் முதல் கட்டமாக கடந்த வெள்ளிக்கிழமை காலை 8.00 மணிக்கு மீனாட்சி அம்மன் ஆலயம் அருகில் உள்ள பொதுநோக்கு மண்டபத்தில் பொது மக்களுக்கான விழிப்பூட்டும் நிகழ்வு நடைபெற்றது.

அதனைத் தொடர்ந்து வல்வை மீன் சந்தை முதல் சிவகுரு வித்தியாசாலை வரையான கடற்கரையோரத்தை துப்புரவாக்கும் பணி முன்னெடுக்கப்பட்டது.

இக் கரையோரத்தை துப்புரவாக்கும் பணியில் சிவகுரு வித்தியாசாலை மாணவர்கள், பொதுமக்கள், வல்வை நகரசபை ஊழியர்கள் என பலரும் கலந்து கொண்டார்கள்.

இலங்கை அபிவிருத்திக்கான ஊக்குவிப்பு மையத்தின் நிதிப்பங்களிப்புடன் வடமராட்சி நல்லொழுக்க நிறுவனத்துடன் , வல்வெட்டித்துறை நகரசபையும் இணைந்து வல்வெட்டித்துறை நகரத்திற்குட்பட்ட பகுதிகளில் கடற்கரையோர பிரதேசத்தை துப்புரவாக்கும் நிகழ்ச்சி திட்டத்தை ஆரம்பித்தமை குறிப்பிடத்தக்கது.

## கடந்த வருடத்தின் முதல் 10 மாதங்களில் 311 காட்டு யானைகள் உயிரிழப்பு

கொழும்பு,ஜன.16

கடந்த வருடத்தின் முதல் 10 மாதங்களில் 311காட்டுயானைகள் உயிரிழந்துள்ளன என வனஜீவராசிகள் திணைக்களம் தெரிவித்துள்ளது.

குறித்த காலப்பகுதிக்கள் காட்டு யானைகள் தாக்கி 95 பேர் உயிரிழந்துள்ளனர் என்றும் திணைக்களம் குறிப்பிட்டுள்ளது.

கடந்த வருடத்தில் மனித செயற்பாட்டினாலேயே, அதிக யானைகள் உயிரிழந்துள்ளன என்றும் தெரிவிக்கப்படுகிறது.

இதேவேளை உயிரிழந்த யானைகளில் 48 யானைகள், துப்பாக்கிச் சூட்டுக்கு இலக்காகியுள்ளன.

அத்துடன் 29 யானைகள் ரயிலில் மோதி விபத்துக்குள்ளாகியுள்ளன என வன ஜீவராசிகள் திணைக்களம் குறிப்பிட்டுள்ளது.

திணைக்களத்தின் தரவுகளின் பிரகாரம், 2013 ஆம் ஆண்டு முதல் 2018 ஆம் ஆண்டு ஒக்டோபர் வரை ஆயிரத்து 445 யானைகள் உயிரிழந்துள்ளன.

காலைக்கதிர் Kalaikkathir



## மாமனிதர் குமார் பொன்னம்பலம்

# ஞாபகார்த்த வெற்றிக் கிண்ணத்தை சுவீகரித்து வைளவ்சி உடுவில் அணி!

வவுனியா,ஜன.16

மாமனிதர் குமார் பொன்னம்பலம் ஞாபகார்த்த வெற்றிக் கிண்ணத்தை வைளவ்சி உடுவில் அணி சுவீகரித்துக் கொண்டது.

தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் விளையாட்டுத் துறையால் நடத்தப்படும் மாமனிதர் குமார் பொன்னம்பலம் ஞாபகார்த்த மென்பந்து வெற்றிக் கிண்ணத்தின் போட்டிகள் கடந்தவாரம் ஆரம்பிக்கப்பட்டு நேற்று முன்தினத்துடன் நிறைவு பெற்றது. வட மாகாணத்தின் முப்பத்தியிரண்டு அணிகள் பங்கு பற்றிய மேற்படி போட்டிகள் கனகராயன் குளம் பொது மைதானத்தில் இடம்பெற்றது.



முதலாவது அரையிறுதியில் பருத்தித்துறை வீனஸ் அணியை எதிர்த்து கிளிநொச்சி யுனைட்டட் அணி மோதியதில் பருத்தித்துறை வீனஸ் அணி வெற்றி பெற்றது. மற்றைய அரையிறுதி ஆட்டத்தில் வைளவ்சி உடுவில் அணியை எதிர்த்து கிளிநொச்சி இந்து இளைஞர் அணி மோதியதில் வைளவ்சி உடுவில் அணி வெற்றி பெற்றது. இறுதிப் போட்டியில் பருத்தித்தித்துறை வீனஸ் அணியுடன் பலப்பரீட்சை நடத்தியது வைளவ்சி உடுவில் அணி.

நாணய சுழற்சியில் வெற்றி பெற்ற வைளவ்சி உடுவில் அணியின் தலைவர் ஜஸ்ரின் துடுப்பெடுத்தாட எடுத்த தீர்மானத்திற்கு அமைவாக உடுவில் வைளவ்சி அணியானது நிர்ணயிக்கப்பட்ட பத்து பந்துப் பரிமாற்றங்களில் ஏழு இலக்குகளை இழந்து தொண்ணூறு ஓட்டங்களைப் பெற்றது. அந்த அணி சார்பாக அதிகபட்சமாக ஜெசிந்தன் மூன்று ஆறு ஓட்டங்கள், ஒரு நான்கு ஓட்டம் அடங்கலாக இருபத்தியொன்பது ஓட்டங்களைப் பெற்றதுடன் பிரணவன் மூன்று ஆறு ஓட்டங்கள் அடங்கலாக இருபத்தியிரண்டு ஓட்டங்களைப்பெற்றார்.

பந்து வீச்சில் வீனஸ் அணி சார்பாக வினோதிஸ் இரண்டு பந்து பரிமாற்றங்களில் பன்னிரண்டு ஓட்டங்களைக் கொடுத்து இரண்டு இலக்குகளையும், நிறோஜன் இரண்டு பந்துப் பரிமாற்றங்களை வீசி இருபத்தியிரண்டு ஓட்டங்களைக் கொடுத்து இரண்டு இலக்குகளையும் கைப்பற்றினார்கள்.

தொண்ணூற்று ஒன்று என்ற வெற்றியிலக்கை நோக்கித் துடுப்பெடுத்தாடிய பருத்தித்துறை வீனஸ் அணியானது ஆரம்பம் முதலே அதிரடியாக ஆடிவந்தாலும் அடுத்தடுத்து முக்கிய இலக்குகளை இழந்தது. ஒருகட்டத்தில் நாற்பத்து நான்கு ஓட்டங்களில் முக்கியமான ஐந்து இலக்குகளை இழந்து தடுமாறினாலும் வீனஸ் அணியுடைய மத்திய வரிசை துடுப்பாட்ட வீரர்களான சாருஜன் மற்றும் பிரசாத் ஆகியோருடைய பொறுப்பான துடுப்பாட்டத்தின் மூலம் நிதானமாக ஓட்டங்களைக் குவித்தது.

இரண்டு பந்து பரிமாற்றங்களில் இருபத்திமூன்று ஓட்டங்கள் பெறவேண்டும் என்ற நிலையில் ஒன்பதாவது பந்துபரிமாற்றத்தை வைளவ்சி உடுவில் அணியின் தலைவர் ஜஸ்ரின் மிக நேர்த்தியாக வீசி இரண்டு ஓட்டங்களைக் கொடுத்து ஓர் இலக்கினைக் கைப்பற்றி போட்டியின் போக்கை மாற்றினார்.

இறுதிப் பந்துப் பரிமாற்றத்தில் இருபது ஓட்டங்கள் பெறவேண்டிய நிலையில் சாருஜன் இரண்டு ஆறு ஓட்டங்கள் ஒரு நான்கு ஓட்டங்களைப் பெற்றார். இறுதியில் எண்பத்து ஐந்து ஓட்டங்களைப் பெற்று ஐந்து ஓட்டங்களால் வீனஸ் அணி தோல்வியைத் தழுவியது. அதிக பட்சமாக சாருஜன் ஆட்டமிழக்காமல் மூன்று ஆறு ஓட்டங்கள் ஒரு நான்கு ஓட்டம் அடங்கலாக இருபத்தியேழு ஓட்டங்களைப் பெற்றார். பந்து வீச்சில் வைளவ்சி அணி சார்பாக சிறப்பாக பந்து வீசிய அணித்தலைவர் ஜஸ்ரின் மூன்று இலக்குகளைச் சாய்த்தார்.



இறுதிப்போட்டியின் ஆட்டநாயகனாக வைளவ்சி அணியின் துடுப்பாட்ட வீரர் ஜெசிந்தன் , தொடரின் சிறந்த துடுப்பாட்ட வீரராக பருத்தித்துறை வீனஸ் அணியின் நிறோஜன் தொடரின் சிறந்த பந்து வீச்சாளராக வைளவ்சி உடுவில் அணியின் அணித்தலைவர் ஜஸ்ரின் ஆகியோர் தெரிவு செய்யப்பட்டார்கள்.

சம்பியன் அணிக்கு இருபத்தையாயிரம் ரூபா பணப்பரிசு மற்றும் வெற்றிக் கேடயமும், இரண்டாம் இடம் பெற்ற அணிக்கு ரூபா பத்தாயிரம் பணப்பரிசு மற்றும் வெற்றிக்கிண்ணமும், தொடர் ஆட்ட நாயகர்களுக்கு தலா மூவாயிரம் மற்றும் வெற்றிக்கிண்ணமும் சகல போட்டிகளுக்கான ஆட்டநாயகன் விருதுகளும் முதல் சுற்றில் வெற்றி பெற்ற சகல அணிகளுக்குமான விளையாட்டு உபகரணங்களும் வழங்கப்பட்டது.

தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் தலைவரும் மாமனிதர் குமார் பொன்னம்பலம் அவர்களது மகனுமாகிய கஜேந்திரகுமார் பொன்னம்பலம் மற்றும் முன்னணியின் பொதுச்செயலாளர் செல்வராஜா கஜேந்திரன், மட்டக்களப்பு கல்வியியற் கல்லூரியின் விரிவுரையாளர் பஞ்சாட்சரம் கெங்கநாதன், முன்னாள் கோட்டக்கல்விப் பணிப்பாளர் அருளம்பலம் விநாயகமூர்த்தி, கொல்லர்புளியங்குளம் இராமகிருஷ்ணா வித்தியாலய அதிபர் ஜெ.ஸ்ரீரங்கநாதன், ஆலங்குளம் முருகானந்தா வித்தியாலய ஆசிரியர் செ.லக்சுமிகாந்தன், வவுனியா வடக்கு உள்ளூராட்சி மன்ற உறுப்பினர்கள், வவுனியா உள்ளூராட்சி மன்ற உறுப்பினர்கள் மற்றும் தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் செயற்பாட்டாளர்கள் ஆகியோர் இரண்டு அணிகளுக்கும் கைலாகு கொடுத்து போட்டியினை ஆரம்பித்து வைத்தார்கள்.

# இலங்கை கிரிக்கெட் நிறுவன தேர்தல்; வேட்பாளர்களின் பெயர்கள் வெளியீடு

கொழும்பு,ஜன.16

இலங்கை கிரிக்கெட் நிறுவனத் தேர்தலில் போட்டியிடுவதற்கு தாக்கல் செய்யப்பட்ட வேட்பு மனுக்கள் தொடர்பில் முன்வைக்கப்பட்ட 16 ஆட்சேபனைகளில், ஒரேயொரு ஆட்சேபனை மாத்திரம் ஏற்றுக்கொள்ளப்பட்டதுடன், ஏனைய அனைத்து ஆட்சேபனைகளையும் புறக்கணிப்பதற்கு தேர்தல் செயற்குழு நடவடிக்கை எடுத்துள்ளது.

இதன்படி, இம்முறை இலங்கை கிரிக்கெட் நிறுவனத் தேர்தல் தலைவர் பதவிக்கு ஜயந்த தர்மதாச, மொஹான் டி சில்வா, கே. மதிவாணன் மற்றும் சம்மி சில்வா உள்ளிட்ட நால்வர் போட்டியிடவுள்ளனர் என தேர்தல் செயற்குழு உத்தியோகபூர்வமாக அறிவித்துள்ளது.



அத்துடன், உப செயலாளர் பதவிக்கு வேட்பு மனு தாக்கல் செய்திருந்த கிஹான் வீரசிங்க, குறித்த பதவிக்கான தகைமைகளைக் கொண்டிருக்காத காரணத்தால் அதை புறக்கணிப்பதற்கு தேர்தல் செயற்குழு நடவடிக்கை எடுத்துள்ளது.

எதிர்வரும் பெப்ரவரி 7ஆம் திகதி நடைபெறவுள்ள இலங்கை கிரிக்கெட் நிறுவன தேர்தலில் போட்டியிடுவதற்கு தகுதிபெற்றவர்கள் தொடர்பிலான அறிவிப்பு நேற்று முன்தினம் (14) விளையாட்டுத்துறை அமைச்சில் வைத்து டபிள்யூ.டி. சந்திரஜயதிலக தலைமையிலான தேர்தல் செயற் குழுவினால் அறிவிக்கப்பட்டது.

இம்முறை தேர்தலில் 7 முக்கிய பதவிகளுக்காக 26 வேட்பு மனுக்கள் தாக்கல் செய்யப்பட்டிருந்தன. இதில் ஆறு பேரின் வேட்பு மனுக்களுக்கு எதிராக ஆட்சேபனைகள் முன்வைக்கப்பட்டிருந்தன.

இதில் உப தலைவர் பதவிக்கு போட்டியிடுவதற்காக வேட்பு மனு தாக்கல் செய்திருந்த 1996 உலகக் கிண்ணத்தை வென்று கொடுத்த இலங்கை அணியின் முன்னாள் தலைவரான அர்ஜுன ரணதுங்க மற்றும் அதே உலகக் கிண்ணத்தில் இலங்கை அணிக்காக விளையாடிய பிரமோத்ய விக்ரமசிங்க, கிரிக்கெட் நிறுவனத்தின் முன்னாள் தலைவரான ஜயந்த தர்மதாச, ரிஸ்மன் நாரங்கொட, நளீன் விக்ரமசிங்க, சன்ஜய சேதர செனரத் ஆகியோருக்கு எதிராக இவ்வாறு ஆட்சேபனைகள் முன்வைக்கப்பட்டன.

எனினும், குறித்த வேட்பு மனுக்களுக்கு எதிராக விசாரணைகளின் போது எந்தவொரு எதிர்ப்புகளும் முன்வைக்கப்படவில்லை. இதனால் குறித்த 6 பேருக்கும் தேர்தலில் போட்டியிடுவதற்கான சந்தர்ப்பத்தை வழங்க தேர்தல் குழு தீர்மானித்துள்ளது.

## மொட்டுடன்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி) மன்ற உறுப்பினர் மனுநாணயக்கார தெரிவித்துள்ளார்.

அவர்களுடன் இணைந்து கூட்டணி அமைப்பதாகக் கூறும் சுதந்திரக்கட்சி உறுப்பினர்கள் வீணான சவாலுக்கு உள்ளாக வேண்டிவரும் என்பதை புரிந்து கொள்ளவேண்டும் எனவும் அவர் எச்சரித்துள்ளார்.

ஸ்ரீ லங்கா சுதந்திரக் கட்சி பொதுஜன பெரமுனவுடன் கூட்டணி அமைக்கவுள்ளமை தொடர்பில் அவரிடம் வினவியபோதே அவர் இதனைக் கூறினார். (ஐ)

## வாகனங்களுக்கு...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி) வேதான் இந்தக் காபன் வரி காணப்படுகின்றது. எரிபொருள் சூத்திரம் என்று ஒன்றை அரசாங்கம் அறிமுகம் செய்துள்ளது. அதில் இந்த வரியை சேர்த்திருக்கலாம்.

தனியாக காபன் வரி என்ற ஒன்று அவசியமற்றதாகும். வீட்டில் பயணங்களுக்குப் பயன்படுத்தாது நிறுத்தி வைத்துள்ள வாகனங்களுக்கும் இந்த வரியை அறவிடுவது நியாயமான ஒன்றா என்பதை அரசாங்கத்துக்கு இவ்வரி தொடர்பில் ஆலோசனை வழங்கிய அதிகாரிகள் கருத்தில் கொள்ளாதது ஏன் எனவும் அச்சங்கத்தின் தலைவர் கெமுனு விஜேரத்ன கேள்வி எழுப்பியுள்ளார்.

## வடக்கு...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி) வேண்டும் என்று வடக்கு மாகாண ஆளுநர் கலாநிதி சுரேன் ராகவன் தெரிவித்துள்ளார்.

இது தொடர்பில் ஆளுநரின் ஊடகப் பிரிவு அனுப்பிவைத்த செய்திக் குறிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:

தமிழர்களின் பண்டிகையான தைப்பொங்கல் பண்டிகை ஆளுநர் கலாநிதி சுரேன் ராகவன் தலைமையில் நேற்று முற்பகல் வடக்கு ஆளுநர் செயலகத்தில் இடம்பெற்றது.

வடக்கு ஆளுநர் செயலகத்தின் பணிக்குழாமினருடன் பொங்கல் பொங்கிச் சம்பிரதாய பூர்வமாகத் தைப்பொங்கல் பண்டிகையை ஆளுநர் கொண்டாடினார்.

இதன்போது பணிக்குழாமினரிடையே கருத்துத் தெரிவித்த ஆளுநர் கலாநிதி சுரேன் ராகவன்,

தற்போது வடக்கு மாகாணத்தில் ஆசிரியர்களாகவும் தாதியர்களாகவுமே பெண்கள் அதிகளவில் பணிபுரிந்து வருகின்றனர். அந்த நிலைமையினை மாற்றி 2020/2021ஆம் ஆண்டளவில் வடக்கிலுள்ள அனைத்து அரச அலுவலகங்களிலும் பெண்களின் பிரதிநிதித்துவத்தை 50 வீதமாக அதிகரிப்பதற்கு நான் எதிர்பார்த்துள்ளேன். அதற்கான நடவடிக்கைகளை உடனடியாகவே ஆரம்பிக்கவேண்டும் – என்றார்.

ஆளுநரின் செயலாளர் சட்டத்தரணி எல்.இளங்கோவன் உள்ளிட்ட ஆளுநர் செயலகத்தின் பணிக்குழாமினர் இந்தப் பொங்கல் நிகழ்வில் கலந்து கொண்டிருந்தனர்.

இதேவேளை தைப்பொங்கலை முன்னிட்டு யாழ்ப்பாணத்தின் இந்துக்கல்லூரி பழைய மாணவர்கள் வருடந்தோறும் ஏற்பாடு செய்யும் கலாசார பவனியையும் ஆளுநர் உத்தியோகபூர்வமாக ஆரம்பித்து வைத்தார். (ஐ-07)

# மோட்டார் சைக்கிள் - ரிப்பர் விபத்தில் 2 இளைஞர்கள் பலி

பொலனறுவை தலுகான பிரதேசத்தில் நேற்று செவ்வாய்க்கிழமை பிற்பகல் இடம்பெற்ற வீதி விபத்தொன்றில் இளைஞர்கள் இருவர் பலியாகினர் எனப்பொலிஸார் தெரிவித்தனர்.

17 மற்றும் 18 வயதுடைய இளைஞர்கள் இருவர் மோட்டார் சைக்கிளில் சென்று கொண்டிருக்கும்போது அவர்கள் பயணித்தமோட்டார்சைக்கிள் மீது ரிப்பர் வாகனம் மோதியதில் இளைஞர்கள் இருவரும் அந்த இடத்திலேயே பலியாகியுள்ளனர்.

விபத்தை ஏற்படுத்திய ரிப்பர் வாகனம் தப்பிச் சென்றுள்ளதாக அங்கிருந்தோர் தகவல் தெரிவித்துள்ளனர்.



இளைஞர்கள் தூக்கி வீசப்பட்டதும் வீதியில் கிடந்த மோட்டார் சைக்கிள் பின்னால் வந்த பஸ்ஸின் கீழே அகப்பட்டுக் கொண்டுள்ளது.

சம்பவ இடத்திற்கு விரைந்த போக்குவரத்துப் பொலிஸார் உயிரிழந்த இளைஞர்களின் சடலங்களையும் அவர்கள் பயணம் செய்த மோட்டார் சைக்கிளையும் பொது மக்களின் உதவியுடன் மீட்டுள்ளனர்.

இச்சம்பவம் தொடர்பான விசாரணைகளை மேற்கொண்டு வரும் பொலிஸார் விபத்தில் பலியான இளைஞர்களை அடையாளம் காண்பதற்காக சடலங்களைப் பொலனறுவை வைத்தியசாலைக்கு அனுப்பி வைத்தனர். தப்பிச் சென்ற ரிப்பர் வாகனத்தையும் அதன் சாரதியையும் தேடி பொலிஸார் வலை விரித்துள்ளனர்.

## ஜனாதிபதித்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி) அல்லது 'மொட்டு' தவிர வேறு ஒரு சின்னத்தின் கீழ் ஒரு கூட்டணியை உருவாக்க சம்மதம் தெரிவித்துள்ளனர் என ஆங்கில ஊடகம் ஒன்று செய்தி வெளியிட்டுள்ளது.

எதிர்க்கட்சித் தலைவரின் முழு ஆதரவு இருந்தால் ஜனாதிபதி சிறிசேனவை ஆதரிப்பேன் என ஜனாதிபதியின் சகோதரனான டட்லி சிறிசேனவிடம் கோட்டாபய தெரிவித்திருந்தார்.

இதேவேளை, ஜனாதிபதி வேட்பாளராக மைத்திரிபால சிறிசேன மீண்டும் போட்டியிடுவார் என்றும் ஸ்ரீ.ல.சு.க.வின் 4.2 மில்லியன் வாக்குகள் மற்றும் பொதுஜன பெரமுனவின் 1.5 மில்லியன் வாக்குகள் ஆகியவற்றுடன் அவரது வெற்றி நிச்சயம் எனவும் மஹிந்த சமரசிங்க தெரிவித்துள்ளார்.

ஜனாதிபதித் தேர்தல் விரைவில் நடக்கக் கூடும் என்று ஜனாதிபதி மைத்திரி தெரிவித்துள்ளார் எனவும் அந்தச் செய்தியில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ஐ)

## எந்தவொரு...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி) அப்போது அவர் மேலும் தெரிவித்தவை வருமாறு:-

நாங்கள் எப்போதும் பௌத்தத்தை மதிக்கிறோம். நாட்டைப் பிளவுபடுத்துவதற்கு எந்தவொரு நல்ல பௌத்தருமோ, அல்லது நாட்டின் எந்தவொரு பகுதியுமோ விரும்பவில்லை.

நாட்டில் நிலவிய மோசமான போரை, தமது வியர்வையையும் இரத்தத்தையும் சிந்தி முடிவுக்கு கொண்டு வந்து, நாட்டைப் பாதுகாத்த போர் வீரர்களை எந்தவொரு நீதிமன்றத்துக்கும் கொண்டு செல்வதற்கு நாங்கள் இடமளிக்கமாட்டோம். இவையெல்லாம் பொய்யான பரப்புரைகள்.

அத்துடன் பெரும் நிதிமோசடி தொடர்பான வழக்கு விசாரணைகளை மேற்கொள்ளும் இரண்டாவது விசேட மேல் நீதிமன்றம் இரண்டு வாரங்களுக்குள் நிறுவப்படும்.

விசேட நீதிமன்றுக்கான நீதிபதிகள் நியமிக்கப்பட்டுள்ளனர். எனினும், அந்த விசேட நீதிமன்றத்தை நிறுவ பொருத்தமான இடம் கிடைக்காதமையே தாமதத்துக்கு பிரதான காரணமாகும்.

நீதிமன்ற சேவை அமைப்புச் சட்டமூலத்தின் பிரகாரம் நீதி அமைச்சர் என்றவகையில் எனக்கு வழங்கப் பட்டிருக்கும் அதிகாரத்தின் கீழ் இந்த விசேட நீதிமன்ற அமைப்பு நடவடிக்கைகளை மேற்கொண்டு வருகின்றேன்.

முதலாவது விசேட நீதிமன்றம் புதுக்கடை நீதிமன்ற வளாகத்தில் அமைக்கப்பட்டு தற்போது வழக்கு விசாரணைகள் இடம் பெற்று வருகின்றன.

எனினும் இரண்டாவது நீதிமன்றம் அமைய விருக்கும் இடம் இன்னும் உறுதிப்படுத்தப்படவில்லை. – என அவர் மேலும் கூறியுள்ளார்.

## 5 நாள்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி) டுட்டேர்டேக்குமிடையில் இன்று சந்திப்பு இடம்பெறவுள்ளது.

ஐந்து நாள்கள் உத்தியோகப்பூர்வ விஜயம் மேற்கொண்டு ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன நேற்று பிலிப்பீன்ஸ் பயணித்தார்.

அந்நாட்டின் ஜனாதிபதியின் விசேட அழைப்பிற்கிணங்கவே இவ்விஜயம் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

இரு நாடுகளுக்கும் இடையிலான அரசியல் மற்றும் பொருளாதாரத்தை மேலும் வலுப்படுத்தும் வகையில் 6 உடன்படிக்கைகள் இந்த விஜயத்தின் போது கைச்சாத்திடப்படவுள்ளன.

சுற்றுலாத்துறை ஒத்துழைப்பு, வெளிநாட்டு வேலைவாய்ப்பு, உயர்கல்வி, விவசாயம் என ஆறு புரிந்துணர்வு உடன்படிக்கைகள் இதன்போது கைச்சாத்திடப்படவுள்ளன. இதற்கு அமைச்சரவையும் அனுமதியளித்துள்ளது.

2019 ஆம் ஆண்டில் ஜனாதிபதியின் முதலாவது உத்தியோகப்பூர்வ வெளிநாட்டுப் பயணம் இது வாகும்.

## அமெ...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி) துள்ளதாக தகவல்கள் வெளியாகியுள்ளன.

இலங்கை பாதுகாப்பு அமைச்சுடன் இந்த உடன்பாட்டைக் கையெழுத்திடுவதற்கு அமெரிக்கா விருப்பம் வெளியிட்டிருந்தது.

இதற்காக சமர்ப்பித்திருந்த வரைவில், இரு தரப்பு பாதுகாப்பு வசதிகளை உருவாக்குதல், பயிற்சிகள், விநியோகங்கள், பிராந்திய பாதுகாப்பு உள்ளிட்ட விடயங்கள் உள்ளடக்கப்பட்டிருந்தன.

இந்த புரிந்துணர்வு உடன்பாட்டு வரைவு ஆவணத்தை இலங்கை பாதுகாப்புச் செயலர் தலைமையிலான குழுவொன்று ஆராய்ந்த பின்னரே, அதன் பெரும்பாலான உள்ளடக்கங்களை நிராகரித்துள்ளது.

## வவுனியா..

(முதலாம் பக்கத் தொடர்ச்சி) தமது பொழுதை கழித்துக் கொண்டிரந்த சமயம் உணவருந்திய பின்னர் கை கழுவுவதற்காக ஒரு மாணவன் குளத்தின் நீர்ப்பகுதிக்கு சென்ற போது தவறுதலாக கீழே வீழ்ந்தார் எனவும், அவரைக் காப்பாற்றும் நோக்கோடு சென்ற மற்றைய நண்பரும் குளத்தில் வீழ்ந்து மூழ்கி இறந்துள்ளார் என முதல்கட்ட விசாரணைகளில் தெரியவருகின்றது.

வவுனியா விபுலானந்தாக் கல்லூரியின் சாதாரணதர மாணவர்களான 16 வயதுடைய திபின்சன் மற்றும் கரிகரன் ஆகிய இருவருமே இவ்வாறு பலியாகியுள்ளனர். இந்நிலையில் ஏனைய மூவரையும் ஈரப்பெரியகுளம் பொலிஸார் விசாரணை செய்து வருகின்றனர்.

பலியானவர்களின் சடலங்கள் வவுனியா பொது வைத்திய சாலையில் ஒப்படைக்கப்பட்டள்ளன.

இராணுவத்தினர் மற்றும் பொலிஸார் இணைந்து நீரில் விழுந்த மாணவர்களை மீட்க முயன்ற போதும் அது வெற்றியளிக்கவில்லை என்று கூறப்பட்டது.

## பொங்கல்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி) யாழில் நேற்று இடம்பெற்றுள்ளது.

யாழ்ப்பாணம் கே.கே.எஸ். வீதி வண்ணார்பண்ணை, நாச்சிமார் கோவிலடியின் பின்பக்கமாக நேற்று மதியம் 1.30 மணியளவில் இடம்பெற்ற இந்த வாள்வெட்டுச் சம்பவம் அப் பகுதியில் பெரும் பரபரப்பை ஏற்படுத்தியுள்ளது.

இது தொடர்பில் தெரிய வருவதாவது –

மேற்படி கோவில் பின்பக்கமாக இளைஞர்கள் நின்றிருந்த போது அங்கு 6 மோட்டார் சைக்கிள்களில் முகத்தை மூடி மறைத்தவாறு பத்திற்கும் மேற்பட்ட ஒரு கும்பல் வாள்களுடன் வந்துள்ளது. அந்தக் கும்பல் அங்கு நின்றிருந்த இளைஞர்களை வாள்கொண்டு துரத்தி துரத்தியுள்ளது.

இதன் போது அவர்களில் இரண்டு இளைஞர்கள் மீது அக்குழுவினர் வாள்வெட்டுத் தாக்குதலை நடத்தியுள்ளனர். அதில் ஒரு இளைஞரின் வலது கை கட்டைவிரல் துண்டிக்கப்பட்டுள்ளது. அத்தோடு அந்த இளைஞர்களின் மோட்டார் வாகனங்களையும் கோடாரிகள் மற்றும் வாள்களால் அக்குழுவினர் அடித்தும் வெட்டியும் சேதப்படுத்தியுள்ளனர்.

இவ்வாறு அங்கு சிலநிமிடங்கள் அட்டகாசத்தில் ஈடுபட்ட வாள்வெட்டுக் கும்பல் அவர்களை மிரட்டியும் துரத்தியும் வெட்டியும் காயப்படுத்தியும் வாகனங்களை அடித்து கொத்திச் சேதப்படுத்தியும் விட்டு தொடர்ந்து அங்கிருந்து தப்பிச் சென்றுள்ளது.

காயமடைந்தவர்கள் அம்புலன்ஸ் மூலம் யாழ் போதனா வைத்தியசாலைக்கு கொண்டு செல்லப்பட்டு தற்போது வைத்தியசாலையில் சிகிச்சைக்காக அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

பின்னர் சம்பவ இடத்திற்குச் சென்ற யாழ்ப்பாணப் பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.

## ஹெரோயின்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி) சம்பவத்துடன் தொடர்புடைய பிரதான சந்தேக நபரான பெண்ணை கைது செய்யும் வகையில், சர்வதேசத்தின் ஒத்துழைப்பைப் பெறும் நோக்கிலேயே இந்தப் பொலிஸ் குழு நாட்டிற்கு வருகை தரவுள்ளது.

சார்க் நாடுகளில் போதைப் பொருள் குற்றங்களை ஆராய்வதற்காக நியமிக்கப்பட்ட உறுப்பினர்களும் இந்தக் குழுவில் அடங்குகின்றனர்.

கல்கிசை நீதவான் நீதிமன்றத்தின் அனுமதியுடனேயே இந்தக் குழு நாட்டுக்கு வருகை தரவுள்ளது.

278 கிலோகிராம் ஹெரோயினுடன் பங்களாதேஷ் பிரஜைகள் இருவர் கடந்த மாதம் 31 ஆம் திகதி கைது செய்யப்பட்டனர்.

300 கோடி ரூபாவுக்கும் அதிகப் பெறுமதி வாய்ந்த இந்த ஹெரோயின் தொகையானது கடந்த வருடத்தில் கைப்பற்றப்பட்ட அதிகூடிய ஹெரோயின் தொகையாகும்.

சம்பவத்திற்கு ஒத்துழைப்பு வழங்கிய பெண் பங்களாதேஷில் தலைமறைவாகியுள்ளார் எனத் தக வல்கள் வெளியாகியுள்ள தென பொலிஸ் போதைப்பொருள் ஒழிப்புப் பிரிவின் பணிப்பாளர் குறிப்பிட்டார். (ஐ)

## மாகாண...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி) ஆதரவைப் பெற்று வெற்றி பெறுவதற்கான சாத்தியக்கூறுகள் காணப்படுகின்றது

இவ்வாறு மஹிந்த ஆதரவு நாடாளுமன்ற உறுப்பினர் ரோஹித அபேகுணவர்தன தெரிவித்தார்.

அத்துடன் வடக்கு - கிழக்குத் தவிர்ந்த ஏனைய 07 மகாணங்களிலும் சிறிலங்கா பொதுஜன பெரமுன அமோக வெற்றி பெறும் என்றும் அவர் குறிப்பிட்டார்.

கொழும்பிலுள்ள பொதுஜன பெரமுனவின் தலைமையகத்தில் நேற்று முன் தினம் திங்கட்கிழமை இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்துகொண்டு கருத்துரைக்கும்போதே அவர் இதனைக் குறிப்பிட்டார்.

அவர் மேலும் தெரிவிக்கையில் –

மாகாண சபைகளுக்கான தேர்தலுக்குச் சுதந்திரக் கட்சியே தடையாக உள்ளது என்று பிரதமர் ரணில் விக்கிரமசிங்க கடந்த காலங்களில் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன மீது பழியினை சுமத்தி வந்தார். மாகாண சபைத் தேர்தலை நடத்துவற்கான நடவடிக்கைகளைத் துரிதமாக முன்னெடுக்குமாறு ஜனாதிபதி தற்போது குறிப்பிட்டுள்ளார். சுதந்திரக் கட்சியும் தேர்தலுக்கு தயார் என்பதை உறுதிப்படுத்தப்பட்டுள்ளது.

இப்போது ஐக்கிய தேசியக் கட்சி எவர் மீது பழி சுமத்தித் தேர்தலை பிற்போடும்? நாளை மாகாணத் தேர்தல் இடம்பெறுவதாக இருந்தாலும் எதிர்கொள்ளத் தயார். தேர்தல் எந்த முறையில் வேண்டுமானாலும் நடத்திக் கொள்ளலாம்.

வடக்கு, கிழக்கு மாகாணங்களைத் தவிர்த்து ஏனைய 7 மாகாணங்களிலும் பொதுஜன பெரமுனவினர் அமோக வெற்றி பெறுவார்கள். தமிழ் மக்கள், தமிழ்ப் பிரதிநிதிகளையே தெரிவு செய்வார்கள். அது அவர்களின் அரசியல் ரீதியிலான தனிப்பட்ட உரிமை. இவ்வுரிமையை முன்னாள் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவே வழங்கினார் என்பதை எவரும் மறுக்க முடியாது. – என்றார். (ஐ)

காலைக்கதிர் Kalaikkathir


# யாழ். இந்துவின் தைப்பொங்கல் பவனி



யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரியின் பழைய மாணவர்களின் ஏற்பாட்டில் கல்லூரி அதிபர் சதா நிமலனின் தலைமையில் நேற்று முற்பகல் தைப்பொங்கல் திருநாள் பவனி இடம்பெற்றது. வடக்கு ஆளுநர் கலாநிதி சுரேன் ராகவன் கொடி அசைத்து பவனியை ஆரம்பித்து வைத்தார்.

சிலம்பாட்டம், பொய்க்கால் குதிரை ஆட்டம், மாட்டு வண்டிப் பவனி ஆகிய பாரம்பரிய அம்சங்களுடன் யாழ். நகரை இந்த ஊர்வலம் சுற்றி வந்தது.

# காணாமல் ஆக்கப்பட்ட பிள்ளைகளை மீட்டுத்தர அமெரிக்கா வரவேண்டுமென கோரி கவனவீர்ப்பு

வவுனியா,ஜன.16

காணாமல் ஆக்கப்பட்ட தமது பிள்ளைகளை மீட்டுத் தர அமெரிக்கா வரவேண்டும் என வலியுறுத்தி வவுனியாவில் காணாமல் ஆக்கப்பட்டோரின் உறவுகளால் கவனவீர்ப்பு போராட்டம் ஒன்று முன்னெடுக்கப்பட்டது.

வவுனியா, ஏ9 வீதியில் வீதி அபிவிருத்தி அதிகாரசபைக்கு முன்பாக 694 ஆவது நாளாக சுழற்சி முறையில் போராட்டத்தில் ஈடுபட்டு வரும் காணாமல் ஆக்கப்பட்ட உறவுகளினாலேயே நேற்று இந்த கவனவீர்ப்பு போராட்டம் முன்னெடுக்கப்பட்டது.



முன்னதாக வவுனியா கந்தசாமி கோவிலுக்கு சென்ற காணாமல் ஆக்கப்பட்டோரின் உறவுகள் அங்கு வழிபாடுகளை மேற்கொண்ட பின்னர், அமெரிக்கா மற்றும் ஐரோப்பிய ஒன்றியத்தின் கொடிகளை ஏந்தியவாறு பசார் வீதி வழியாக ஊர்வலமாக தமது போராட்ட தளத்தை அடைந்து கவனவீர்ப்பு போராட்டத்தில் ஈடுபட்டனர்.

இதன்போது எமது பிள்ளைகள் வராது எமக்கு பொங்கல் இல்லை. மாறி மாறி வந்த அரசாங்கங்களில் நாம் நம்பிக்கையிழந்து விட்டோம். கூட்டமைப்பும் எம்மைப் பற்றி பேசாது சிங்கள மக்களுக்கு உரிமையைப் பெற்றுக் கொடுப்பது போன்று செயற்படுகின்றது.

சுமந்திரன் பௌத்தத்துக்கு முன்னுரிமை மற்றும் ஒற்றையாட்சியான ஏக்கிய ராச்சிய என்பவற்றை ஏற்றுக் கொண்டுள்ளார். இனி நாம் அமெரிக்காவை யையும், ஐரோப்பிய ஒன்றியத்தையுமே நம்புகின்றோம்.

அமெரிக்கா வந்து விரைவாக எமக்கு தீர்வைப் பெற்றுத் தர வேண்டும் என இதன்போது அவர்கள் தெரிவித்தார்கள்.





தைப்பொங்கல் தினத்தை ஒட்டி நேற்று வல்வெட்டித் துறையில் இடம்பெற்ற பட்டத்திருவிழாவின் போது வானில் பறந்த அதிசயப் பட்டங்கள்...

இப்பத்திரிகை யாழ்ப்பாணம் இல.30 இந்துக் கல்லூரி வீதியிலுள்ள காலைக்கதிர் பிரஸ் (பிறைவேற்) லிமிட்டெட் நிறுவனத்தின் பணிமனையில் தயாராகி 672B கே.கே.எஸ் வீதியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 16.01.2019 இல் அச்சிடப்பட்டு வெளியிடப்பெற்றது.